# முன்னுரை

புகழ்கள் அனைத்தும் எல்லாவற்றையும் படைத்து பரிபாலனம் செய்யும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும்!

ஸலாதும், ஸலாமும் எங்கள் தலைவர் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார் மீது அவர்களது சங்கைமிகு ஸஹாபாக்கள் மீதும் உண்டாகட்டுமாக !

மார்க்கத்தில் கட்டாயமாக கற்கப்பட வேண்டிய கல்வியை தேடிக்கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் பெருங் கடமையாகும். என்பதாக எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

தன்னையும், தன் குடும்பத்தையும் கொடூரமான நரக வேதனையிலிருந்து பாதுகாப்பதானது பருவமடைந்த ஒவ்வொருவரும் கட்டாயம் கற்றேயாக வேண்டிய கல்வியை கற்பதன் மூலமே சாத்தியமாகும். ஏனேனில் மார்க்க கடமைகளை சரிவர அறிந்து அதனை நிறைவேற்றாமலும், மார்க்கத்தில் தடைவிதிக்கப்பட்டவைகளை அறிந்து அவைகளை தவிர்ந்து கொள்ளாமலும் ஒருவர் தக்வாவுள்ளவராக ஆக முடியாது.

நம் மீது விதிக்கப்பட்ட கடமைகளையும், நமக்கு விலக்கப்பட்டுள்ள ஹறாம்களையும் அறிய ஓரே வழி கற்றுக் தேர்ந்த அறிஞர்களிடம் சென்று இஸ்லாமிய கல்வி ஞானம் பெறுவதேயாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு, ஜம்இய்யதுல் மʻாரிஉல் ஹைரிய்யஹ் அல் இஸ்லாமிய்யஹ்விலே இருக்கும் இஸ்லாமிய பாடங்கள், மற்றும் ஆய்வுகளுக்கான குழு பல நூல்களை ஆய்வு செய்த போது அவைகள் பூரணமான இஸ்லாமிய தகவல்களை கொண்டதாகவும், சரியான தகவல்களை கொண்டதாகவும் காணப்படாததால். சிறார்களின் வினைத்திறனுக் கேட்ப வாசிக்கவும், புரிந்து கொள்ளவும் இலகுவானதான நூற்களை தயாரித்தலில் பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுப்பட்டனர். அதன் பிரதிபலனாக அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என்ற அற்புதமான நூலை தயாரித்து வெளியிட்டுள்ளனர். இனிமையான சொற்களை கொண்டும், புரிந்துகொள்ள இலகுவான வாக்கிய அமைப்பை கொண்டும் உருவாக்கப்பட்ட இந்த நூற்களை ஒரு பிள்ளை

முறையாக கற்கும் போது அப்பிள்ளை இஸ்லாமிய மார்க்கத்தில் அறிந்திருக்கு வேண்டிய கடமைகளை, நற்குணங்களை அறிந்த ஒரு பிள்ளையாக ஆகிவிடும்.

5 பாகங்களைக் கொண்ட இந்த நூலில் ஒவ்வொரு பாகமும் 3 பிரிவுகளை கொண்டுள்ளது. முதல் பிரிவானது இஸ்லாமிய கோட்பாடுகளை விபரிப்பதாகவும், இரண்டாம் பகுதி இஸ்லாமிய வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் முறைகளை விபரிப்பதாகவும், மூன்றாவது பிரிவு இஸ்லாம் கற்றுத் தரும் நற்குணங்களை விபரிப்பதாகவும் அமைந்துள்ளது.

அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என பெயரிடப்பட்ட இந்நூல் தாங்களது பிள்ளைகள் இவ்வுலகிலும், மறு உலகிலும் வெற்றிபெற வழிவருக்கமெனவும், தாங்களது பிள்ளை நேர்த்தியான நல்லொழுக்கமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப உதவி செய்யுமெனவும் நம்புகிறோம்.

# அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ்

# பாகம் - 03

# فصل العقائد

## இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய விபரம்

பாடம் : 1 الدرس 1

## الإيمان بالله ورسوله

## அமல் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் சரியான முறையில் ஈமான் (நம்பிக்கை) கொள்வதாகும்

قال الله تعالى

إنما المؤمنون الذين ءامنوا بالله ورسوله ثم لم يرتابوا

( سورة الحجرات | ءاية 15 )

**அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“அல்லாஹ்வையும் அவனது தூதரையும் முறைப்படி ஈமான் கொண்டு. அதில் சற்றும் சந்தேகம் கொள்ளாதவர்களே உண்மையான மு.ஃ.மின்களாவார்கள்.”**

**( அத்தியாயம் : அல்-ஹுஜராத் வசனம் : 15 )**

فيجب الإيمان – وهو التصديق الجازم بالقلب – بوجود الله تعالى في الأزل قبل كل شئ وأنه لا أحد يستحق أن يعبد إلا هو وأنه خالق الموجودات كلها

அல்லாஹ் அனைத்து வஸ்துக்களுக்கும் முன்னரான ஆரம்பமற்ற தன்மை உடையவன் எனவும், அவனையன்றி வணங்கி வழிபடத் தகுதியானவன் வேறெவருமில்லை எனவும் நிச்சயமாக அவனே அனைத்து படைப்புக்களையும் படைத்தவன் எனவும் உள்ளத்தால் உண்மைப்படுத்தி உறுதி கொள்வது கடமையாகும்.

والله تعالى موصوف بصفات الكمال اللائقة به منزه عن صفات النقصان خلق الأماكن كلها فلا يحتاج إليها موجود بلا مكان أرسل الأنبياء والرسل بدين الإسلام لهداية الناس أولهم سيدنا ءادم عليه السلام وءاخرهم سيدنا محمد ﷺ وأنزل على بعضهم كتبا تسمى الكتب السماوية

அல்லாஹ் அவனுக்குத் தகுதியான பரிபூரணத் தன்மைகளை உடையவனாகும். அது போல். குறைபாடான அனைத்துத் தன்மைகளை விட்டும் பரிசுத்தமானவன். அவனே அனைத்தையும்

படைத்தான். அவனுக்கு அவற்றின்பால் எந்தத் தேவையும் கிடையாது. மனிதர்களை நேர்வழிப்படுத்த நபிமார்களையும் றஸூல்மார்களையும் புனித இஸ்லாம் மார்க்கத்தை வழங்கி அனுப்பி இருக்கின்றான். அவர்களில் முதன்மையானவர் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஆவார்கள். இறுதியானவர் நபி முஹம்மத் ﷺ ஆவார்கள். இவர்களில் குறித்த சிலருக்கு மட்டும் “ வான வேதங்கள்” என்றழைக்கப் படக்கூடிய வேதங்களை அருளினான்.

ويجب الإيما ن أيضا بما جاء سيدنا محمد ﷺ وبما أخبربه من أمور المستقبل مما يحصل في الدنيا وفي الآخرة وأنه مرسل إلى كل العالمين أي الإنس والجن

எம் தலைவரான முஹம்மத் ﷺ அவர்கள் கொண்டு வந்த அனைத்தையும் ஈமான் கொள்வது கட்டாயமாக இருப்பதுடன், இவ்வுலகிலும், மறுமையிலும் எவைகள் நடைபெற இருப்பதாக அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்களோ அவைகளையும் உறுதியாக ஈமான் கொள்ளல் கட்டாயமாகும். மேலும் நபி முஹம்மத் ﷺ அவர்கள் மனிதன் மற்றும் ஜின் ஆகிய இனத்தாருக்கு தூதராக அனுப்பப்பட்டவர் எனவும் நம்பிக்கைக் கொள்வதும் அவசியமாகும்.

أسئلة

1- اذكر ءاية من القرءان في وجوب الإيمان بالله ورسوله
2- ماهو الإيمان ؟
3- لم أرسل الله الأنبياء والرسل ؟
4- من هو أول الأنبياء ؟ ومن هو ءاخر الأنبياء ؟
5- ماذا أنزل الله على بعض الأنبياء ؟
6- رسول الله محمد لمن هو مرسل ؟

பாடம் : 2 الدرس 2

## الإسلام

## இஸ்லாம்

قال الله تعالى

ومن يبتغ غير الإسلام دينا فلن يقبل منه

( سورة آل عمران | ءاية 85 )

**அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ யார் இஸ்லாம் அல்லாத வேறு ஒரு மார்க்கத்தை பின்பற்றுவாரோ அந்த மார்க்கத்தை அல்லாஹ் அவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளமாட்டான்.”**

**( அத்தியாயம் : ஆல இம்ரான் வசனம் : 85 )**

الإسلام هو الدين الذي رضيه الله لعباده وأمرنا باتباعه

அல்லாஹ் அடியார்களுக்கு பொருந்திக் கொண்ட மார்க்கமே இஸ்லாமாகும். அதனையே ஏற்றுப் பின்பற்றுமாறு மனிதர்களுக்கு கட்டளையிட்டுள்ளான்.

قال رسول الله ﷺ

بني الإسلام على خمس : شهادة أن لا إله إلا الله وأن محمدا رسول الله وإقام الصلاة وإيتاء الزكاة وحج البيت وصوم رمضان

( رواه البخاري ومسلم )

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : “இஸ்லாம் ஐந்து விடயங்களின் மீது அமைக்கப்பட்டுள்ளது.**

**01. உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமே என்றும் நபி முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உள்ளத்தினால் உறுதி கொண்டு நாவினால் மொழிவதாகும்.**

**02. தொழுகையை நிறைவேற்றுவதாகும்.**

**03. ஸகாத் கொடுப்பதாகும்.**

**04. க.்.பாவை ஹஜ் செய்வதற்கு சக்தியுள்ளவர் ஹஜ் செய்வதாகும்.**

**05. றமழான் மாதத்தில் நோன்பு நோற்பதாகும்."**

**( அறிவித்தவர் :அல்-புஹாரீ, முஸ்லிம் )**

الإسلام والإيمان متلازمان : قال أبو حنيفة رضي الله عنه : لا يكون إيمان بلا إسلام ولا إسلام بلا إيمان فهما كالظهر مع البطن

இஸ்லாமும் ஈமானும் ஒன்றுக்கொன்று பற்றிப் பிடிக்கப்பட வேண்டியவை ஆகும். ஒன்றை விட்டு மற்றதை பிரித்து விட முடியாது. இஸ்லாமின்றி ஈமானில்லை. ஈமானின்றி இஸ்லாமில்லை. இவை இரண்டுமே வயிற்றையும் முதுகையும் போன்றன என இமாம் அபூ ஹனீபஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் உதாரணம் கூறுகிறார்கள்.

والإسلام والإيمان هما الإقرار باللسان مع التصديق بالقلب بشهادة أن لا إله إلا الله وأن محمدا رسول الله

இஸ்லாமும் ஈமானும் என்பது

உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியான இரட்சகன் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் இல்லை என்றும், நிச்சயமாக நபி முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் எனவும் உள்ளத்தால் உறுதி கொள்வதும் நாவினால் மொழிந்து ஏற்பதும் ஆகும்.

ثم لا يكون المسلم كامل الإيمان إلا بأداء الواجبات واجتناب المحرمات

وأما من ءامن بالله ورسوله وارتكب كبائر الذنوب فيسمى مسلما عاصيا أو مؤمنا عاصيا

ஒரு முஸ்லிம் கடமைகளை நிறைவேற்றுவதாலும், தவிர்க்கப் பட வேண்டிய ஹறாம்கள் அனைத்தை விட்டும் தவிர்ந்து கொள்வதாலும் மட்டுமே ஈமானின் உயர் தரத்தை அடைய முடியும். எவர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் விசுவாசம் கொண்டு பெரும் பாவங்களை செய்வாரோ அவர் “ **பாவியான முஸ்லிம்**” அல்லது “**பாவியான மு.ஃ.மின்** ” என அழைக்கப்படுவார்.

أسئلة

1- اذكر ءاية من القرءان تدل على صحة دين الإسلام
2- ماهو دين الإسلام ؟
3- اذكر حديثا عن رسول الله في بيان أعظم أمور الإسلام
4- ماذا قال الإمام أبو حنيفة رضي الله عنه عن الإيمان والإسلام ؟
5- مامعنى الإسلام والإيمان ؟
6- كيف يكون المسلم كامل الإيمان ؟
7- ماذا يسمى المسلم الذي يرتكب الكبائر الذنوب

பாடம் : 3 الدرس 3

**الله واحد لا شريك له**

**அல்லாஹ் இணையின்றி தனித்தவன்**

**அவனுக்கு எந்தவொரு இணையும் இல்லை**

قال الله تعالى
فاعلم أنه لا إله إلا الله
( سورة محمد | ءاية 19 )

**அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான் :**
**விளக்கம் :**
**“நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர ( உண்மையாக ) வணங்கப்படத் தகுதியானவன் வேறெவரும் இல்லை என்பதை நீர் அறிந்து கொள்வீராக!”**
**( அத்தியாயம் : முஹம்மத் வசனம் : 19 )**

إن الله عز وجل موصوف بالوحدانية فهو واحد لا شريك له وهو موجود لا شك في وجوده لا بداية له ولا نهاية له وهو الإله الذي يستحق العبادة وما سواه لا يستحق العبادة والله تعالى لا يحتاج إلى المخلوقا ت وكل المخلوقات تحتاج إلى الله فلا خالق لهذا العالم غيره ولا رازق على الحقيقة سواه ولا إله إلا هو سبحانه وتعالى

நிச்சயமாக, அல்லாஹ் தனித்தவனும் இணைகள் அற்றவனும் ஆவான். அவனுக்கு நிகரானது எதுவும் இல்லை. அவன் உள்ளான் என்ற விடயத்தில் எந்த சந்தேகமும் கிடையவே கிடையாது. அவனுக்கு ஆரம்பமோ, முடிவோ கிடையாது. அவனே வணங்கி வழிபடத் தகுதியானவன். அவனையன்றி வேறெவரும் வணங்கி வழிபட **தகுதி யற்றவர்கள்**. அல்லாஹ் தன் படைப்புக்களின் பக்கம் தேவையற்றவன். அனைத்துப் படைப்பினங்களும் அவனது உதவியின் பக்கமே தேவைகளைக் கொண்டிருக்கின்றன. அவனையன்றி வேறெவரும் இவ்வுலகைப் படைக்கவில்லை. உண்மையில் உணவளிப்பவனும் அவனே. அவனைப் படைப்புகளின் தன்மைகளை விட்டும் நான் தூய்மை படுத்துகிறேன். அவன் படைப்புகளின் தன்மைகளை விட்டு பரிசுத்தமானவன்.

والله سبحانه وتعالى موصوف بصفات الكمال التي تليق به كالعلم والقدرة والإرادة منزه عن النقصان كالجهل والعجز والجسم والمكان والجهة

அல்லாஹ் அவனுக்குத் தகுதியானதும் பொருத்தமானதுமான பூரணத் தன்மைகளையுடையவன். அறிவுடையவனாயிருத்தல், நாட்டமுடையவனாயிருத்தல், பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளக் கூடிய அனைத்தின் மீதும் வல்லமை கொண்டவானயிருத்தல்.

மடமை, இயலாமை, உடற்த்தன்மை, இடம் எடுத்துக் கொள்ளல் மற்றும் திசை எடுத்துக் கொள்ளல் போன்ற குறைபாடான அனைத்துத் தன்மைகளை விட்டும் அல்லாஹ் பரிசுத்தமானவன்.

قال الله تعالى :

ليس كمثله شئ وهو السميع البصير

( سورة الشورى | ءاية 11 )

**அல்லாஹ் கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

> **“ எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை மேலும் அவன் யாவற்றையும் பார்ப்பவனாகுவும் கேட்பவனாகவும் உள்ளான்.”**
> **( அத்தியாயம் : அ‛-‛ˀறா வசனம் : 11 )**

وقال الإمام أحمد بن حنبل وذو النون المصري :

مهما تصورت ببالك فالله بخلاف ذلك
أي مهما خطر ببالك فالله لا يشبه ذلك

**இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் மற்றும் இமாம் துன் நூன் அல் மிஸ்ரீ ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறியுள்ளார்கள் :**

**“ நீ உனது உள்ளத்தினால் அல்லாஹ்வை எவ்வாறெல்லாம் கற்பனை செய்தாலும் அவன் அதற்கும் ஒப்பாகமாட்டான். ”**

أسئلة

1- اذكر ءاية من القرءان فيه بيان وحدانية الله

2- مامعنى الله موصوف بالوحدانية ؟

3- اذكر بعض الصفات التي يوصف الله بها

4- اذكر ءاية قرءانية فيها تنزيه الله عن الشبيه

5- ماذا قال أحمد بن حنبل وذو النون المصري في تنزيه الله مشابهة الخلق ؟

பாடம் : 4 الدرس 4

## أفضل الأعمال

## மிகச்சிறந்த அமல்

قال رسول الله ﷺ :

أفضل الأعمال إيمان بالله ورسوله

رواه البخاري

**அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**“மிகச் சிறந்த அமல் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் முறைப்படி ஈமான் கொள்வதாகும்.”**

**( அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ )**

إن أفضل عمل يقوم به الإنسان هو الإيمان بالله ورسوله محمد ﷺ وأما من لم يؤمن بالله ورسوله فهو كافر وقد أعد الله له عذابا في نار جهنم

ஒரு மனிதன் செய்யக்கூடிய அமல்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வையும் அவனது தூதரான முஹம்மத் ﷺ அவர்களையும் ஈமான் கொள்வதாகும். யார் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொள்ளவில்லையோ அவன் காபிராவான். நிச்சயமாக அல்லாஹ் காபிருக்காக நரகத்தில் நோவினை தரக்கூடிய தண்டனையை தயார் செய்து வைத்துள்ளான்.

والكافر لا تقبل أعماله عند الله وتبارك وتعالى

பரிசுத்தமான அல்லாஹ்விடத்தில் ஒரு காபிரானவரின் அமல்கள் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

فإذا دفع الكافر بعض ماله إلى الفقراء والمحتاجين أو ساعد اليتامى والأرامل فإن الله لا يثيبه على ذلك يوم القيامة لأن كل الأعمال الصالحة التي يعملها الإنسان كالصلاة والصيام والحج والزكاة لا تكون مقبولة عند الله بدون الإيمان ورسوله محمد عليه السلام

ஒரு காபிரானவர் ஏழைகளுக்கும், தேவைகள் உள்ளவர்களுக்கும் தன் உதவிகளை பொருள் மூலமாக செய்தாலோ அல்லது அநாதை, விதவைகளுக்கு உதவினாலோ நிச்சயமாக அல்லாஹ்

அவருக்கு நற்கூலி வழங்கமாட்டான். ஏனெனில் ஒரு மனிதன் செய்யக் கூடிய அமல்களான தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் போன்ற நல்லமல்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர் முஹம்மத் ﷺ அவர்களையும் முறைப்படி ஈமான் கொள்ளாமல் அவை அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அமையாது.

يقول الله تبارك وتعالى

ومن يعمل من الصالحات من ذكر أو أنثى وهو مؤمن فأولئك يدخلون الجنة ولا يظلمون نقيرا

( سورة النساء | ءاية 124 )

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ ஆண், பெண் எவாராயிருந்தாலும் ஈமான் கொண்டவராக நற்குருமங்களைச் செய்தால் அவர்கள் சுவனத்தில் நுழைவார்கள், அற்ப அளவும் அநீதம் செய்யப்பட்ட மாட்டார்கள்.”**

**( அத்தியாயம் : அந்-நிஸாஉ வசனம் :124 )**

والكفر هو أكبر الذنوب وهو شر خطير لأن من مات عليه دخل النار خالدا فيها

குப்ர் (இஸ்லாமிய கொள்கை மறுப்பு) பெரும் பாவமாகும்.

குப்ரின் மீது மரணிப்பவர் நரகம் நுழைந்து அதில் நிரந்தரமாக தங்க வைக்கப்படுவதன் காரணமாக ‘‘குப்ர்’’ என்பது ஒரு அபாயமான ஒரு குற்றச் செயலாகும்.

وأما الإيمان فهو نعمة عظيمة لأن من مات عليه مؤمنا لا بد أن يدخل الجنة ويخلد فيها

நிச்சயமாக யார் மு.ஃமினாக மரணிப்பாரோ அவர் சுவர்க்கம் நுழைந்து அதில் தங்க வைக்கப்படுவார். எனவே ஈமான் என்பது மாபெரும் அருட்கொடை ஒன்றாகும்.

أسئلة

1- اذكر حديث أفضل الأعمال ومن رواه ؟
2- ماهو أفضل عمل يقوم به الإنسان ؟
3- من لم يؤمن بالله ورسوله ماذا يسمى ؟
4- ماذا أعد الله للكافر ؟
5- أعمال من لا تقبل عند الله تعالى ؟
6- ما هو الكفر ؟ وما هو مصير من مات عليه ؟
7- ماهو مصير من مات مؤمنا ؟

பாடம் : 5 الدرس 5

## الأنبياء عليهم الصلاة والسلام

## அல்லாஹ்வின் தூதர்கள்

قال رسول الله ﷺ :

أفضل ما قلت أنا والنبيون من قبلي لا إله إلا الله

رواه مالك والترمذي

**அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**“நானும் எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறிய வார்த்தைகளில் மிகச்சிறந்தது “ உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை” என்பதாகும்.**

**( அறிவித்தவர் : இமாம் மாலிக், அத்-திர்மதீ )**

لقد أرسل الله عز وجل الأنبياء والرسل بعقيدة الإسلام ودين الحق أي دين الإسلام والإسلام هو الدين الذي أمرنا الله باتباعه ولا دين صحيح سواه فجميع الأنبياء كانوا على دين واحد

وكل الأنبياء كانوا يعبدون الله تعالى لم يعبدوا في حياتهم صنما ولا شمسا ولا كوكبا من أولهم ءادم عليه السلام إلى ءاخرهم محمد ﷺ وعلى سائر إخوانه النبيين كل الأنبياء قالوا لا إله إلا الله

நிச்சயமாக அல்லாஹ் றஸூல்மார்களுக்கும் நபிமார்களுக்கும் உண்மையான இஸ்லாம் மார்க்கத்தை வழங்கி அனுப்பியுள்ளான். அல்லாஹ் எங்களுக்கு பின்பற்றுமாறு ஏவிய மாார்க்கம் இஸ்லாமாகும்.

இஸ்லாம் அன்றி மெய்யான மார்க்கம் வேறெதுவும் கிடையாது. ( இஸ்லாமே மெய்யான மார்க்கமாகும். ) அனைத்து இறைத் தூதர்களும் ஒரே மார்க்கத்தின் மீதே இருந்தனர்.

அனைத்து நபிமார்களும் அல்லாஹ்வையே வணங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். முதல் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தொடக்கம் இறுதி நபி முஹம்மத் ﷺ அவர்கள் வரை அனைத்து நபிமார்களும் தம் வாழ்நாளில் எந்தவொரு சிலையையும், நட்சத்திரத்தையும் வணங்க வில்லை. அனைத்து நபிமார்களும், ‘‘லா இலாஹ இல்லல்லாஹு’’ என்றே கூறினார்கள்.

دعاء

اللهم توفنا على الإيمان واجعلنا من أهل الجنة

யா அல்லாஹ் !

எங்களை ஈமானின் மீது மரணிக்கச் செய்வாயாக இன்னும் எங்களை சுவர்க்க வாசிகளிலும் ஆக்கி விடுவாயாக

أسئلة

1- اذكر حديثا عن رسول الله في بيان عقيدة الأنبياء ومن رواه ؟
2- بم أرسل الله عز وجل الأنبياء والرسل ؟
3- على أي دين كان الأنبياء ؟
4- ماذا قال كل الأنبياء ؟

பாடம் : 6 الدرس – 6

## صفات الأنبياء

## அல்லாஹ்வினது தூதர்களின் பண்புகள்

قال الله تعالى :

وكلا فضلنا على العالمين

سورة الأنعام | ءاية 86

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ அல்லாஹ் அகிலத்தார் அனைவரை விடவும் அனைத்து நபிமார்களையும் சிறப்பாக்கிவைத்துள்ளான்.”**

**( அத்தியாயம் : அல்-அன்ஆம் வசனம் : 86 )**

خلق الله الأنبياء وجعلهم أفضل المخلوقات فهم أفضل من الملائكة ومن سائر البشر

அவர்கள் மலக்குமார்களை விடவும் ஏனைய அனைத்து மனிதர்களை விடவும் சிறந்தவர்கள்.

وخصهم بالأخلاق الحسنة والصفات الحميدة فهم لا يكذبون ولا يغشون ولا يسرقون ولا يشربون الخمر ولا يقعون في الكفر

அல்லாஹ் அவர்களுக்கு சிறந்த நற்பண்புகளையும் போற்றுதலுக்குரிய பண்புகளையும் வழங்கி அவர்களை சிறப்புப்படுத்தியுள்ளான்.

அவர்கள் பொய் பேச மாட்டார்கள். மோசடி செய்ய மாட்டார்கள். திருட மாட்டார்கள். மது அருந்த மாட்டார்கள். குப்ரில் ஈடுபட மாட்டார்கள்.

والأنبياء هم أجمل خلق الله من ءادم عليه السلام إلى محمد ﷺ

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் தொடக்கம் முஹம்மத் ﷺ வரை அனைத்து நபிமார்களும் அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளை விடவும் மிக அழகானவர்கள்.

والمسلم لا يعتقد أن أصل الإنسان قرد لأن ءادم عليه السلام هو أول البشر وقد كان جميل الشكل وحسن الوجه حسن الصوت وكان يتكلم بكلام واضح مفهوم وهو الذي علم أولاده الإيمان واللغات

மனிதன் குரங்கிலிருந்து தோன்றியதாக எந்தவொரு முஸ்லிமும் நம்பிக்கை கொள்ளக் கூடாது. ஏனெனில் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உலகின் முதல் மனிதராகவும், அழகிய தோற்றம் கொண்டவராகவும், அழகிய முகம் உடையவராகவும், அழகிய குரலுடையவராகவும் இருந்தார்கள். இன்னும் தெளிவாக விளங்கக் கூடிய முறையில் பேசுபவராகவும் இருந்தார்கள். தனது பிள்ளைகளுக்கு ஈமானையும், மொழிகளையும் கற்றும் கொடுத்தார்கள்.

قال رسول الله ﷺ :

ما بعث الله نبيا إلا حسن الوجه حسن الصوت وإن نبيكم أحسنهم وجها وأحسنهم صوتا

رواه الإمام أحمد

அல்லாஹ் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :

“அல்லாஹ் அனைத்து நபிமார்களையும் முகம் அழகானவர்களாகவும் அழகிய குரல் வலம் மிக்கவர்களாகவும் அனுப்பினான். நிச்சயமாக உங்கள் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவர்களில் மிக அழகானவரும், மிக குரல் வலம் மிக்கவரும் ஆவார்கள்.”

( அறிவித்தவர் இமாம் அஹ்மத் )

أسئلة

1- اذكر ءاية تدل على تفضيل الأنبياء
2- اذكر بعض صفات الأنبياء
3- من هم أجمل خلق الله ؟
4- كيف كان ءادم ؟
5- من هو أول البشر ؟ وكيف كان يتكلم ؟
6- اذكرحديثا عن رسول الله يدل على جمال الأنبياء

பாடம் : 7 الدرس 7

محمد ﷺ

## நபி முஹம்மத் அலைஹிஸ்ஸலாம்

قال الله تعالى

وما أرسلناك إلا رحمة للعالمين

سورة الأنبياء | ءاية 107

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“( நபியே! ) அகிலத்தாருக்கு அருடகொடையாகவேயன்றி உம்மை நாம் அனுப்பவில்லை.”**

**( அத்தியாயம் : அல்-அன்பியாஉ வசனம் : 107 )**

إن الله سبحانه وتعالى أرسل سيدنا محمدا ﷺ إلى جميع الناس ليدعوهم إلى توحيد الله وعبادته وإلى ترك عبادة الأصنام التي لا تضر ولا تنفع وليخرج الناس من ظلمات الكفر إلى نور الإيمان

நிச்சயமாக, அல்லாஹ் முஹம்மத் ﷺ அவர்களை மனிதர்களை தௌஹீதின் பால் அழைப்பதற்காகவும், அல்லாஹ் மாத்திரமே வணங்கி வழிபடத் தகுதியானவன் எனவும், பிரயோஜனமோ தீங்கோ இழைக்காத சிலைகளை வணங்குவதை விடுமாறு மக்களுக்கு பிரச்சாரம் செய்தவற்காகவும் மேலும் குப்ர் எனும் இருளில் இருந்து மக்களை வெளியேற்றுவதற்காகவும் அனுப்பி வைத்தான்.

لقد أمرهم رسول الله ﷺ بأن يشهدوا أن لا إله إلا الله وأن محمدا رسول الله وأن يؤدوا الواجبات ويجتنبوا المحرمات وأخبرهم أن من مات على الإيمان يدخل الجنة خالدا فيها وأن من مات على الكفر يدخل النار خالدا فيها

உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் இல்லை எனவும் நிச்சயமாக நபி முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் எனவும் உள்ளத்தால் உறுதிப்படுத்தி நாவால் மொழிந்து ஏற்றுக் கொள்ளுமாறும்,

கடமைகளை சரிவர நிறைவேற்றி ஹறாமை விட்டு விலகி நடக்குமாறும் மனிதர்களுக்கு நபி முஹம்மத் ﷺ அவர்கள் ஏவினார்கள். நிச்சயமாக எவர் ஈமானின் மீது மரணிப்பாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைந்து நிரந்தரமாக தங்குவார் எனவும் மேலும் எவர் குப்ரின் மீது மரணிப்பாரோ அவர் நரகம் நுழைந்து அதிலே நிரந்தரமாக தங்குவார் எனவும் தூதர் அவர்கள் அறிவித்தார்கள்

دعاء

اللهم إني أصبحت ( أو أمسيت ) أشهدك وأشهد حملت عرشك وملا ئكتك وجميع خلقك أنك أنت لا إله إلا أنت وحدك لا شريك لك وأن محمدا عبدك ورسولك

أسئلة

1- لمن أرسل الله سيدنا محمدا ﷺ ؟
2- اذكر ءاية من القرءان تدل على ذلك ؟
3- بم أمر رسول الله ﷺ الناس ؟
4- وماذا أخبرهم ؟

الدرس – 8

பாடம் : 8

**الملائكة الكرام**

**சங்கையான மலக்குமார்கள்**

قال الله تعالى عن الملائكة

لا يعصون الله ما أمرهم ويفعلون ما يؤمرون

سورة التحريم | ءاية 6

**அல்லாஹ் மலக்குமார்களை பற்றி பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**"அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஒரு போதும் மாறு செய்ய மாட்டார்கள். அல்லாஹ்வினால் எதை செய்யுமாறு ஏவப்பட்டார்களோ அதை மாத்திரமே செய்வார்கள்."**

**( அத்தியாயம் : அத்-தஹ்ரீம் வசனம் : 6 )**

الملائكة أجسام نورانية خلقهم الله من نور ليسوا ذكورا ولا إناثا لا يأكلون ولا يشربون ولا ينامون يطيعون الله ما أمرهم وكلهم مؤمنون بالله أتقياء صالحون

மலக்குமார்கள் பிரகாசத்தினாலான உடற்தன்மை உடையவர்கள். அல்லாஹ் அவர்களை ஒளியால் படைத்தான். அவர்கள் ஆண்களுமல்லர் பெண்களுமல்லர். அவர்கள் உண்ணவோ, பருகவோ, உறங்கவோ மாட்டார்கள். மேலும் அல்லாஹ் ஏவியவைகளுக்கு வழிப்படுவார்கள். அவர்கள் அனைவருமே அல்லாஹ்வை ஈமான் கொண்ட தக்வாவுள்ள ஸாலிஹான நல்லடியார்கள் ஆவார்கள்.

والملائكة أكثر عدد من البشر ومسكنهم السماء وهم مكلفون بوظائف مختلفة وهم يصلون كصلاتنا خمس مرا ت في اليوم والليلة

மலக்குமார்கள் மனிதர்களை விட எண்ணிக்கையில் மிக அதிகமானவர்களாகும். அவர்கள் குடியிருக்குமிடம் வானமாகும். பல

பொறுப்புக்களை நிறைவேற்ற பணியமர்த்தப்பட்ட அவர்கள் எம்மைப் போன்றே தினமும் ஐவேளைத் தொழுபவர்களாக இருக்கின்றார்கள்.

ورؤساء الملائكة هم :

جبريل وميكائيل وإسرافيل وعزرائيل  وحملة العرش فسيدنا جبريل عليه السلام هو أفضل الملائكة ومن جملة وظائفه النزول بالوحي على الأنبياء وسيدنا عزائيل عليه السلام مكلف بقبض الأرواح وسيدنا ميكائيل عليه السلام مكلف بالمطر والزرع وسيدنا إسرافيل عليه السلام مكلف بالنفخ في الصور

மலக்குமார்களின் தலைவர்களாகிறவர்கள்.

ஜீப்ரீல், மீகாஈல், இஸ்ராபீல், அஸ்ணராயீல் இன்னும் அர்ஷை சுமக்கக் கூடிய மலக்குகள்.

எம் தலைவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் மலக்குமார்களிலே மிகச் சிறந்தவராவார்கள். நபிமார்களுக்கு வஹியைக் கொண்டு சேர்ப்பது அவரின் மொத்தப் பணிகளில் ஒன்றாகும். எம் தலைவர் இஸ்ராஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உயிர்களைக் கைப்பற்ற பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

எம் தலைவர் மீகாஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மழைகள், பயிர்களை முளைக்கச் செய்ய பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இன்னுமோரு எம் தலைவரான இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மறுமைக்கான ஸூர் ஊதும் பொறுப்பைச் சாட்டப்பட்டவர்களாவார்கள்.

المسلم يحب الملائكة جميعهم ولا يستهزئ بهم ولا يشتمهم

ومن شتم ملكا من الملائكة كعزرائيل عليه السلام يكفر

ஒரு முஸ்லிம் மலக்குகள் அனைவரையும் நேசிப்பார். அவர்களை பரிகசிக்கமாட்டார், திட்டமாட்டார்.

யார் மலக்குமார்களை திட்டுவாரோ அவர் காபிராகிவிடுவார் உதாரணம் : அஸ்ராஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை திட்டுவதைப் போல.

أسئلة

1- اذكر ءاية من القرءان عن الملائكة
2- من هم الملائكة ؟
3- من أكثر عددا الملائكة أم بشر ؟ وأين مسكن الملائكة ؟
4- من هم رؤساء الملائكة ؟
5- من أفضل الملائكة ؟ اذكر بعض وظائفه
6- من هو الملك المكلف بقبض الأرواح ؟
7- من هو الملك المكلف بالمطر والزرع ؟
8- من هو الملك المكلف بالنفخ في الصور

பாடம் : 9 الدرس – 9

## الكتب السماوية

## வான வேதங்கள்

## (அல்லாஹ்வினால் அருளப்பட்ட வேதங்கள்)

إن الله تعالى أنزل كتبا سماوية على بعض الرسل لهداية الناس وإرشادهم لما فيه خيرهم وسعادتهم في الآخرة وعدد الكتب السماوية كثير ولكن أشهرها أربعة هي :

அல்லாஹ் மனிதர்களை நேர்வழிப் படுத்தவும், மனிதர்களின் மறுமை வெற்றியும் நலவும் உள்ள பாதையை காட்டிக் கொடுக்கவும் சில தூதர்களுக்கு வான வேதங்களை இறக்கி அருளினான். வான வேதங்களின் எண்ணிக்கை அதிகம் என்றாலும், அவற்றில் மிக பிரபல்யமானவை 4 வேதங்களாகும்.

1- الزبور : أنزل على سيدنا داؤد عليه السلام

ஸபூர் : இவ்வேதம் எம் தலைவர் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அருளப்பட்டது.

2- والتوراة الأصلية : أنزلت على سيدنا موسى عليه السلام باللغة العبرانية

அடிப்படை தவ்ராத் : இவ்வேதம் எம் தலைவர் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அப்ரானிய்யஹ் மொழியில் அருளப்பட்டது.

3- والإنجيل الأصلي : أنزلت على سيدنا عيسى عليه السلام باللغة السريانية

அடிப்படை இன்ஜீல் : இவ்வேதம் எம் தலைவர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுர்யானிய்யஹ் மொழியில் அருளப்பட்டது.

4- والقرءان : أنزل على سيدنا محمد ﷺ باللغة العربية وهو أفضل الكتب وءاخرها

அல் குர்ஆன் : இவ்வேதம் எம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களுக்கு அறபு மொழியில் அருளப்பட்டது. இது வேதங்களில் மிகச் சிறந்ததும் இறுதியானதுமாகும்.

دعاء
ربنا لا تزغ قلوبنا بعد إذ هديتنا وهب لنا من لدنك رحمة إنك أنت الوهاب

أسئلة
1- ماهي الكتب السماوية ؟
2- ماهي أشهر الكتب السماوية ؟
3- على من أنزل الزبور ؟
4- على من أنزلت التوراة الأصلية ؟ وأي لغة ؟
5- على من أنزل الإنجيل الأصلي ؟ وبأي لغة ؟
6- على من أنزل القرءان ؟ وبأي لغة؟

பாடம் : 10 الدرس -10

## اليوم الآخر

## இறுதி நாள்

اليوم الآخر هو يوم القيامة ويبدأ من خروج الناس من قبورهم بعد أن ينفخ سيدنا إسرافيل بالصور

இறுதி நாள் என்பது கியாமத் நாளாகும், அந்த நாளானது எம் தலைவர் இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஸூர் ஊதி மக்கள் தம் கப்றுகளிலிருந்து வெளியாகும் நேரத்தில் இருந்து தொடங்குகிறது.

والأجساد التي أكلها التراب يعيدها الله تعالى كما كانت ويعيد الروح إليها ثم يجمعون للحساب على أرض غير هذه الأرض لا جبال فيها ولا بحار تسمى الأرض المبدلة فتوزن أعمالهم في الميزان الذي له كفتان كفة للحسنات وكفة للسيئات والكافر ليس له من الحسنات شئ ثم يدخل الله تعالى المؤمنين الأتقياء الجنة بلا عذاب

மண்ணரித்து சதைகள் இல்லாது போன உடல்களை அல்லாஹ் மீண்டும் அவைகள் இருந்தது போல் ஆக்குவான். மீண்டும் ரூஹையும் வழங்குவான். பின் இதுவல்லாத வேறு ஒரு பூமியின் மீது கேள்வி கணக்குக்காக மனிதர்கள் ஒன்று சேர்க்கப் படுவார்கள். அப் பூமியில் மலைகளோ, கடல்களோ இருக்காது. அப்பூமியை “ புரட்டப்பட்ட பூமி” என்றும் சொல்வதுண்டு. ஒன்று சேர்க்கப்பட்ட மனிதர்கள் அனைவரதும் செயல்கள் தராசிலே அளவிடப்படும். அத்தராசுக்கு நன்மை, தீமையை அளவிடுவதற்கென இரு தட்டுகள் காணப்படும். காபிராக மரணித்தவருக்கு எந்தவொரு நன்மையும் இருக்காது. பின்னர் உலகில் வாழும் போது பாவங்களைத் தவிர்ந்து, கடமைகளை நிறைவேற்றி வாழ்ந்த மு.ஃ.மின்களை எந்த வேதனையுமின்றி அல்லாஹ் சுவனத்தில் நுழையச் செய்வான்.

أما المؤمنون العصاة فقسم منهم يسامحهم الله ويدخلهم الجنة بلا عذاب وقسم منهم يعذبهم الله في النار ثم يدخلهم الجنة

பாவியான மு.ஃ.மின்களில் ஒரு பிரிவினரை அல்லாஹ் மன்னித்து எந்தத் தண்டனையும் இன்றி சுவனம் நுழைவிப்பான். இன்னும் ஒரு பிரிவினரை நரகில் நுழையச் செய்து தண்டனையளித்து பின்னர்

சுவனம் நுழைவிப்பான். அதிலே அவர்களை நிரந்தரமாகவும் தரிபடச் செய்வான்.

وأما الكفار فإنهم لا يدخلون الجنة بالمرة إنما يدخلهم الله النار ويخلدون فيها

காபிர்கள் ஒருபோதும் சுவனம் நுழையமாட்டார்கள். அவர்களை அல்லாஹ் நரகில் நுழைவிக்கச் செய்து அதிலேயே நிரந்தரமாகத் தரிபடத் செய்வான்.

أسئلة

1- ماهو اليوم القيامة ؟
2- متى يبدأ اليوم الآخر ؟
3- ماذا يحصل للأجساد التي أكلها التراب ؟
4- لم يجمع الناس يوم القيامة ؟ وأين يجمعون ؟
5- ماذا تسمى الأرض التي يحشر عليها الناس ؟
6- بم توزن أعمال العباد ؟
7- من يدخل بلا عذاب ؟
8- ماذا يحصل للمؤمنين العصاة يوم القيامة ؟

பாடம் : 11 الدرس -11

## الإيمان بالقدر

## நடைபெறும் நிகழ்வுகள் யாவும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நிகழ்கின்றன என்பதை ஈமான் கொள்ளுதல்

**قال الله تعالى : إنا كل شئ خلقناه بقدر**

( سورة القمر : الآية 49 )

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ நிச்சயமாக நாம் அனைத்தையும் விதிப்பிரகாரமே படைத்துள்ளோம்.”**

**( அத்தியாயம் : அல்-கமர் வசனம் : 49 )**

إن الله تعالى خلق المخلوقات كلها فمنها الحسن والقبيح والحلو والمر والخير والشر وخلق الإنسان وخلق أعماله فالصالح من هذه الأعمال يكون بمحبة الله وخلقه ورضاه

நிச்சயமாக அல்லாஹ் அனைத்து படைப்புகளையும் படைத்தான். அவற்றில் அழகானதுமுண்டு, அலங்கோலமானதுமுண்டு, நல்லதுமுண்டு, கெட்டதுமுண்டு, இனிப்பானதுமுண்டு, கசப்பானதுமுண்டு, மனிதர்களை படைத்தவனும் அவனே. மனிதர்கள் செய்யும் செயல்களை படைத்தவனும் அவனே. செயல்களிலே காணப்படும் நல்ல செயல்களானது அல்லாஹ்வினால் படைக்கப்பட்டிருப்பதுடன் அவனது பொருத்தத்தை பெற்றனவாகவும் இருக்கின்றன.

والسيئ من هذه الأعمال يكون بخلقه وليس بمحبته ورضاه

செயல்களிலே காணப்படும் தீய செயல்களானது அல்லாஹ்வினால் படைக்கப்பட்டிருப்பதுடன் அவனது பொருத்தத்தை பெற்றதாக இல்லை.

وجميع ما يحصل في هذا العالم من خير وشر يحصل بمشيئة الله تعالى تقديره وعلمه

எவ்வுலகில் ஏற்படும் நல்லவை கெட்டவை அனைத்துமே அல்லாஹ்வினது நாட்டத்தின் பிரகாரமும், ஏற்பாட்டின் பிரகாரமும் அறிவின் பிரகாரமும் நடைபெறுகின்றன.

قال رسول الله ﷺ:

ماشاء الله كان وما لم يشأ لم يكن

رواه أبو داؤد

**அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**"அல்லாஹ் எதை நாடியிருக்கிறானோ அது நடந்தேதீரும். எதை அவன் நாடவில்லையோ அது ஒரு பொது நடக்காது."**

**( அறிவித்தவர் : அபூ தாவூத் )**

فكل ما أراد الله وجوده لا بد أن يوجد ومالم يرد وجوده فلا يوجد أبدا

எவையெல்லாம் நடைபெற வேண்டுமென அல்லாஹ் நாடியிருக்கிறானோ அவை அனைத்தும் நடைபெற்றேயாகும். மேலும் எவையெல்லாம் நடைபெற வேண்டுமென அவன் நாடவில்லையோ அவை ஒரு போதும் நடைபெற மாட்டாது.

للحفظ غيبا

மனனம் இடுவதற்காக

| المعاصي تحصل من العبد | الطاعات تحصل من العبد |
|---|---|
| بمشيئة الله | بمشيئة الله |
| وعلم الله | وعلم الله |
| وتقديرالله | وتقديرالله |
| وبخلق الله | وبخلق الله |
| لا بأمر الله | وبأمرالله |
| ولا بمحبته | وبمحبة الله |
| ولا برضاه | ورضاه |

| | |
|---|---|
| அடியானினால் நடைபெறும் பாவகாரியங்களானது | அடியானினால் நடைபெறும் நல் வணக்க வழிபாடுகளானது |

| | |
|---|---|
| அல்லாஹ்வின் நாட்டத்தின் பிரகாரமும் | அல்லாஹ்வின் நாட்டத்தின் பிரகாரமும் |
| அல்லாஹ் அறிந்ததன் பிரகாரமும் | அல்லாஹ் அறிநத்தன் பிரகாரமும் |
| அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரமும் | அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரமும் |
| அல்லாஹ் அதனை படைத்ததனாலும் | அல்லாஹ் அதனை படைத்ததனாலும் |
| அல்லாஹ் அதனை ஏவாது | அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரமும் |
| அல்லாஹ் அவைகளை பொருந்திக் கொள்ளாது நடைபெறுகின்றன | அல்லாஹ் அவைகளை பொருந்திக் கொள்வதுடன் நடைபெறுகின்றன. |

# فصل العبادات

# வணக்க வழிபாடுகள் பற்றிய விபரம்

الدرس – 1

பாடம் : 1

**الوضوء**

**வுழூஉ**

قال الله تعالى

يأيها الذين ءامنوا إذا قمتم إلى الصلاة فاغسلوا وجوهكم وأيديكم إلى المرافق وامسحوا برأوسكم وأرجلكم إلى الكعبين

سورة المائدة : ءاية 6

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**" நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் தொழுகைக்குத் தயாரானால் உங்கள் முகங்களையும், முழங்கைகள் உற்பட உங்கள் கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். மேலும், உங்கள் தலைகளை ( தண்ணீரை தொட்டுத் ) தடவிக் கொள்ளுங்கள். கரண்டைக் கால்கள் உற்பட உங்கள் கால்களையும் கழுவிக்கொள்ளுங்கள்."**

**( அத்தியாயம் : அல்-மாஇதஹ் வசனம் : 6 )**

أركان الوضوء ستة وهي :

வுழூவுடைய கடமைகள் ஆறாகும்.

அவையாவன :

1. النية بالقلب عند غسل الوجه فيقول بقلبه (( نويت الوضوء )) أو نحوه

1. முகத்தை கழுவும் போது நிய்யத் வைத்தல்.
வுழூ செய்கின்றேன் என்று அல்லது அது போன்ற நிய்யத்தை தனது உள்ளத்தால் கூறுவார்.

.2 وغسل الوجه من منابت شعر الرأس إلى أسفل الذقن ومن الأذن إلى الأذن

2. முகத்தை கழுவுவதென்பது தலை முடி முளைக்க ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து நாடிக்குழி வரையிலும் ஒரு காதில் இருந்து மற்றைய காது வரையிலும் கழுவதாகும்.

.3 وغسل اليدين إلى المرفقين أي مع المرفقين

3. இரு கைகளையும் முழங்கைகள் உட்படக் கழுவுதல்.

.4 ومسح بعض الرأس

4. தலையின் சில பகுதிகளை நீரினால் தடவுதல்.

.5 وغسل الرجلين إلى الكعبين

5. இரு கால்களையும் கரண்டைக் கால் உட்படக் கழுவுதல்.

.6 والترتيب أي ترتيب هذه الأمور كما ذكرت

6. மேற்கூறப்பட்டது போன்று இந்த விடயங்களை ஒழுங்கு முறைப்படி செய்தல்.

## ومن سنن الوضوء

## வுழூவின் சில ஸுன்னத்துக்கள்

التسمية

பிஸ்மில்லாஹ் கூறுதல்.

والاستياك

மிஸ்வாக் செய்தல்.

وغسل الكفين

இரு மணிக்கட்டுக்களையும் கழுவுதல்.

والمضمضة

வாய் கொப்பளித்தல்.

والاستنشاق

நாசிக்கு நீர் செலுத்துதல்.

ومسح جميع الرأس

தலை முடி முழுவதையும் நீரினால் தடவுதல்.

ومسح الأذنين

இரு காதுகளையும் நீரினால் தடவுதல்.

وتخليل أصابع اليدين والرجلين

இரண்டு கை, கால் விரல்களையும் குடைந்து கழுவுதல்.

والطهارة ثلاثا ثلاثا

மும்மூன்று விடுத்தம் ஒவ்வொரு உறுப்பையும் கழுவுதல்.

وتقديم اليمنى على اليسرى

இடது பக்கத்தை விட வலதை முற்படுத்துதல்.

وغسل العضو قبل أن يجف العضو الذي قبله

முன்னால் கழுவிய உறுப்பு காய்வதற்கு முன்னதாக மற்றைய உறுப்பைக் கழுவுதல்.

والدلك وهو إمرار اليد على العضو المغسول

தேய்த்து கழுவுதல். அதாவது கழுவப்படக்கூடிய உறுப்பின் மீது கையை நடத்தாட்டுவதாகும்.

أسئلة

1- اذكر ءاية من القرءان فيها عن أركان الوضوء
2- ماهي أركان الوضوء ؟ عددها
3- متى تكون النية ؟ وما هو محلها ؟
4- ماهو الحد الواجب في غسل الوجه ؟
5- ما هو الحد الواجب في غسل اليدين ؟
6- ما هو الحد الواجب في مسح الرأس
7- ماهو الحد الواجب في غسل الرجلين
8- مامعني الترتيب ؟
9- عدد بعض سنن الوضوء

பாடம் : 2 الدرس -2

## نواقض الوضوء

## வுழூவை முறிக்கும் காரியங்கள்

من نواقض الوضوء

வுழூவை முறிக்கும் காரியங்கள் சில.

1. خروج البول أو الغائط أو الريح

1. சிறுநீர் அல்லது மலம் அல்லது காற்று வெளியாகுதல்.

2. والنوم على البطن أوالظهر أو الجنب الأيمن والأيسر

2. வயிற்றின் மீது அல்லது முதுகின் மீது அல்லது வலது தோல்புயத்தின் மீது அல்லது இடது தோல்புயத்தின் மீது தூங்குதல்.

3. ومس ءالة خروج البول أو حلقة الدبر ببطن الكف بلا حائل

3. உள்ளங்கையால் சிறுநீர் வெளியாகக்கூடிய இடத்தை அல்லது பின் துவாரத்தை எவ்விதத் திரையுமின்றித் தொடுதல்.

4. والجنون والإغماء

4. பைத்தியம், மயக்கம் ஏற்படுதல்.

فمن انتقض وضوءه فلا يجوز أن يصلي إلا بعد تجديد وضوءه

யாருடைய வுழூ முறிந்து விடுமோ அவர் அவருடைய வுழுவைப் புதுப்பிக்கும் வரை தொழ முடியாது.

### شرح بعض الكلمات

باطن الكف : ما لا يظهر عند إطباق إحدى الكفين على الأخرى مع قليل من التحامل والتفريق بين الأصابع تفريقا وسطا

### சில சொற்களுக்குரிய விரிவாக்கம்

**உள்ளங்கை** : ஒரு கையை மற்றைய கையோடு சிறிதாக அழுத்தி, விரல்களுக்கிடையில் சற்று இடைவெளி விட்டு பார்க்கையில் எந்தப்பகுதில் வெளிப்படாது இருக்குமோ அவைதான் உள்ளளங்கையாகும்.

**والحائل** : كأن يكون لابسا قفازا عند المس بالكف أو من فوق السروال

**திரை :** உள்ளங்கையால் தொடும் பொழுது ஒரு கையுறையை அணிந்திருப்பவரைப் போல அல்லது ஆடைக்கு மேலால் தொடுபவரைப் போல.

## من مكروهات الوضوء

**வுழூ செய்யும் போது தவிர்ந்து கொள்ள வேண்டிய வெறுக்கத்தக்க சில விடயங்கள்.**

1. الزيادة على ثلاث مرات في الغسل أو المسح

1. கழுவும் பொழுதும், மஸ்ஹு செய்யும் பொழுதும் மூன்று தடவையை விட அதிகப்படுத்தல்.

2. والكلام أثناء الوضوء بغير كلام الخير كذكر الله

2. வுழூ செய்கின்ற பொழுது அல்லாஹ்வை நினைவுபடுத்தக்கூடிய நல்ல பேச்சுகளை போன்றல்லாத வேறு பேச்சுகளைப் பேசுதல்.

3. والزيادة المفرطة في الماء المستعمل للوضوء

3. வுழூ செய்வதற்கு பயன்படுத்தப்படும் நீரில் பாரிய அளவில் அதிகரிப்பு செய்தல்.

أسئلة

1. عدد نواقض الوضوء
2. من انتقض وضوءه متى يجوز له أن يصلي ؟
3. مامعنى باطن الكف
4. عدد بعض مكروهات الوضوء

பாடம் : 3 الدرس : 3

الاستنجاء

சுத்தம் செய்தல்

قال الله تعالى

إن الله يحب التوابين ويحب المتطهرين

(سورة البقرة : ءاية 222 )

அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :

**விளக்கம் :**

**“ அவர்கள் செய்த பாவச் செயல்களை விட்டும் விலகி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு வேண்டியவர்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான். தண்ணீரால் முழுமையாக சுத்தம் செய்வோரையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான்.”**

**( அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் : 222 )**

يجب الاستنجاء لخروج النجس الرطب من أحد السبلين كالبول والغائط

முன்,பின் இரு துவாரங்களில் ஒன்றின் ஊடாக சிறுநீர், மலம் போன்ற ஈரமான ஒரு நஜீஸ் வெளியாகியதற்காக சுத்தம் செய்வது கடமையாகும்.

ويكفي في الاستنجاء من الغائط : صب الماء المطهر على موضع النجاسة باليد مع الدلك باليد اليسري حتى تزول النجاسة ويصبح الموضع طاهرا

மலம் வெளியாகியதற்காக சுத்தம் செய்யும் பொழுது தானும் சுத்தமான, பிறரையும் சுத்தம் செய்யக்கூடிய தண்ணீரை நஜீஸ் வெளியான இடத்தின் மீது வலது கையால் ஊற்றி அந்த நஜீஸ் நீங்கி, அவ்விடம் சுத்தமாக ஆகும் வரை இடது கையால் தேய்ப்பது போதுமானதாகும்.

ومن البول : صب الماء على محل خروج البول إلى أن يطهر المحل ولا يصح أخذ الماء في اليد ودلك موضع النجاسة به بلا صب لأن في ذلك توسيعا النجاسة فمن خرج منه شئ من ذلك ثم توضأ وصلى بدون استنجاء لا تصح صلاته

சிறுநீர் வெளியாகியதற்காக சுத்தம் செய்யும் பொழுது சிறுநீர் வெளியாகிய இடத்தின் மீது அவ்விடம் சுத்தமாகும் வரை நீரை ஊற்றுவது போதுமானதாகும். நஜீஸ் பட்ட இடத்தை தண்ணீரால் ஊற்றிக்கழுவாமல் தண்ணீரைக் கொண்டு தேய்த்து கழுவுவது கூடாது, ஏனெனில் அவ்வாறு செய்வதினால் நஜீஸ்பட்ட இடம் விசாலமாகுகிறது.

சிறுநீர், மலம் இவைகளில் ஏதாவது ஒன்று எவருக்கேனும் வெளியாகி பின்பு அவர் அதை சுத்தம் செய்யாமல் வுழூசெய்து தொழுதால் அவருடைய தொழுகை நிறைவேறாது.

تنبيه

விழிப்பூட்டல்

يكره الاستنجاء من خروج الريح

காற்று வெளியாகியதற்காக சுத்தம் செய்வது வெறுக்கத்தக்க விடயமாகும்.

للحفظ غيبا

மனனம் செய்வதற்கு

قال رسول الله ﷺ

الطهور شطر الإيمان

رواه مسلم

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
“சுத்தம் ஈமானின் ஒரு பகுதியாகும்.”
**( அறிவித்தவர் இமாம் முஸ்லிம் )**

والطهور هو رفع الحدث وإزالة النجس

சுத்தம் செய்தல் என்பது தொடக்கை நீக்குவதும் நஜிஸை அகற்றுவதும் ஆகும்.

أسئلة

1- اذكر ءاية من القرءان عن الطهارة
2- مم يجب الاستنجاء ؟
3- كيف يستنجى من الغائط ؟
4- كيف يستنجى من البول؟
5- من صلى من غير استنجاء هل تصح صلاته ؟

பாடம் : 4 الدرس :4

## الأذان والإقامة

## அதானும் இகாமத்தும்

إذا دخل وقت الصلاة يسن الأذان وفيه إعلام المسلمين بدخول وقت الصلاة فيقوم أحد المسلمين بالدعوة إلى تأدية الصلاة بالفاظ مخصوصة بصوت مرتفع

தொழுகையுடைய நேரம் நுழைந்தால் அதான் கூறுவது ஸுன்னத்தாகும்.
அதன் மூலமே தொழுகையுடைய நேரம் நுழைந்து விட்டது என்று முஸ்லிம்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.
எனவே தொழுகையுடைய நேரம் நுழைந்து விட்டால் முஸ்லிம்களில் ஒருவர் உயர்ந்த சத்தத்துடன் அதானுக்குரிய சில சொற்களைக் கூறி தொழுகையை நிறைவேற்றுமாறு அழைப்பு விடுப்பார்.

وألفاظ الأذان هي

அதானுடைய சொற்களாவன :

الله أكبر الله أكبر الله أكبر الله أكبر

أشهد أن لا إله إلا الله أشهد أن لا إله إلا الله أشهد أن محمدا رسول الله أشهد أن محمدا رسول الله خي على الصلاة خي على الصلاة خي على الفلاح خي على الفلاح الله أكبر لا إله إلا الله

وفي أذان الصبح يسن أن يزيد المؤذن بعد قوله حي على الفلاح الثانية الصلاة خير من النوم الصلاة خير من النوم

ஸுப்ஹுடைய அதானிலே முஅத்தின் அவருடைய இரண்டாவது حي على الفلاح ( ஹய்யா அலல்பலாஹ் ) என்ற வார்த்தைக்குப் பின்னால் الصلاة خير من النوم (அஸ்ஸலாது ஹய்ரும்மினன்னௌம் ) என்று அதிகரிப்பது ஸுன்னத்தாகும்.

## الإقامة

## இகாமத்

بعد أن ينتهي المؤذن من الأذان وبعد أن يجتمع الناس ويتهيؤون لتأدية فريضة الصلاة يتولى أحدهم إقامة الصلاة فيقول :

முஅத்தின் அதானை முடித்து மக்கள் தொழுகையை நிறைவேற்றுவதற்க்காக ஒன்று கூடி தயாரானதன் பின் தொழுகையுடைய பர்ளை நிறைவேற்றுவதற் காக ஆயத்தமாவார்கள். அவர்களில் ஒருவர் இகாமத் சொல்வதை பொறுப்பேற்று பின்வருமாறு கூறுவார்.

الله أكبر الله أكبر أشهد أن لا إله إلا الله أشهد أن محمدا رسول الله خي على الصلاة خي على الفلاح قد قامت الصلاة قد قامت الصلاة الله أكبر الله أكبر

ويستحب بعد الأذان والإقامة الصلاة على النبي ﷺ سرا أو جهرا وذلك لقول عليه السلام :

அதானுக்கும் இகாமத்துக்கும் பின்னால் தனக்கு கேட்கும் படியோ அல்லது சத்தமிட்டோ நபி ﷺ அவர்களின் மீது ஸலவாத் சொல்வது ஸுன்னத் ஆகும் அதுவாகிறது :

من ذكرني فليصل علي

رواه الحافظ السخاوي

யார் என்னை நினைவுகூறுகிறாறோ அவர் என் மீது ஸலவாத் சொல்லிக் கொள்ளட்டும், என்ற நபி ﷺ அவர்களுடைய வாரத்தைக்காக வேண்டியாகும்.
( அறிவித்தவர் அல்-ஹாபில் ஸகாவீ )

فائدة يستحب الدعاء بين الأذان والإقامة لحديث لا يرد الدعاء بين الأذنين

பிரயோஜனம் தரும் விடயமொன்று
அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில் பிரார்த்தனை செய்வது தட்டப்படமாட்டாது என்ற நபி மொழிக்காக வேண்டி அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில் பிரார்த்தனை செய்வது ஸுன்னத் ஆகும்.

أسئلة

1- إذا دخل وقت الصلاة ماذا يسن ؟
2- ماهي صيغة الأذان ؟
3- ماذا يزيد المؤذن في أذان الصبح ؟
4- ماهي الإقامة ؟
5- ماذا يستحب بين الأذان والإقامة ؟

பாடம் : 5 الدرس :5

## مواقيت الصلاة

## தொழுகை நேரங்கள்

الصلاة هي أفضل الأعمال بعد الإيمان بالله ورسوله فعلى كل مسلم مكلف أن يحافظ عليها ويتعلم كيف يدخل كل وقت من أوقاتها وكيف يخرج

அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் ஈமான் கொண்டதன் பின்னால் மிகச் சிறந்த அமல் தொழுகையாகும். மேலும் அதனைப் பேணி பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லிமான முகல்லப் மீதும் கடமையாகும்.
ஒவ்வொரு தொழுகையின் நேரமும் எவ்வாறு நுழையும் என்பதையும் எவ்வாறு முடிவடையும் என்பதையும் கற்பதும் கடமையாகும்.

1- الصلاة الصبح :
ويبدأ وقتها من طلوع الفجر الصادق وهو بياض يظهر في أرض الأفق الشرقي وينتهي بطلوع الشمس

**ஸுப்ஹ் தொழுகை :**

உண்மையான ஸுப்ஹ் உதயமானதிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பம் ஆகும்.
உண்மையான ஸுப்ஹ் உதயமென்பது கிழக்கு அடி வானத்திலே பரவலாக வெளிப்படக்கூடிய வெள்ளை ஒளியாகும். சூரியன் உதயமாகுவதின் மூலம் ஸுப்ஹுடைய நேரம் முடிவடையும்.

2- الصلاة الظهر :
ويبدأ وقتها من زوال الشمس أي ميلها عن وسط السماء إلى جهة المغرب وينتهي بدخول وقت العصر

ழுஹ்ர் தொழுகை :

நடு வானத்திலுருந்து மேற்க்குத்திசையின் பக்கமாக சூரியன் சாய்வதிலிருந்து அதாவது விலகுவதிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பித்து அஸ்ருடைய நேரம் நுழைவது கொண்டு முடிவடையும்.

3- صلاة العصر:

ويبدأ وقتها إذا صار ظل كل الشئ مثله زائدا على ظله لما كانت الشمس في وسط السماء وينتهي بدخول وقت المغرب

அஸ்ர் தொழுகை :

நடுவானிலே சூரியன் தரிபட்டிருக்கும் போது ஒரு பொருளினுடைய நிழல் அப்பொருள் பொன்ற அளவை அடைந்து அதைவிட அதிகரித்தால் அஸ்ருடைய நேரம் ஆரம்பிக்கும். ம.்.ரிபுடைய நேரம் நுழைவதின் மூலமாக முடிவடையும்.

4- صلاة المغرب

ويبدأ وقتها من مغيب الشمس وينتهي بدخول وقت العشاء

ம.்.ரிப் தொழுகை :

சூரியன் மறைந்ததிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பிக்கும். இ‘ாவுடைய நேரம் நுழைவதுடன் அது நிறைவடையும்.

5- صلاة العشاء

ويبدأ وقتها من مغيب الشفق الأحمر وينتهي بطلوع الفجر

இஷா தொழுகை :

செம்மேகம் மறைந்ததிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பமாகும். பஜ்ர் உதமாகுவதின் மூலம் முடிவடையும்.

أسئلة

1- ماهو أفضل الأعمال بعد الإيمان
2- عدد الصلوات الخمس
3- كيف يبدأ وقت الصبح ؟ وكيف ينتهي ؟
4- كيف يبدأ وقت الظهر ؟ وكيف ينتهي ؟
5- كيف يبدأ وقت العصر؟ وكيف ينتهي ؟
6- كيف يبدأ وقت المغرب ؟ وكيف ينتهي ؟
7- كيف يبدأ وقت العشاء ؟ وكيف ينتهي ؟

பாடம் :6 الدرس :6

## شروط صحة الصلاة

## தொழுகை செல்லுபடியாவதற்குரிய நிபந்தனைகள்

قبل أداء الصلاة لا بد أن يراعي شروط صحة الصلاة كي تكون صلاته صحيحة ومن هذه الشروط

தொழுபவர், அவரது தொழுகை செல்லுபடியாவதற்காக தொழுகையை நிறைவேற்ற முன்னர் சில நிபந்தனைகளைக் கவனிப்பது அவசியமாகும்.
அந் நிபந்தனைகளில் சில பின்வருமாறு :

1. الإسلام : فلا تصح الصلاة من كافر

1. முஸ்லிமாக இருத்தல் வேண்டும் : ஒரு காபிரடமிருந்து தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. والوضوء : أي أن يكون متوضأ

2. வுழூ செய்திருத்தல் வேண்டும்.

3. والطهارة عن النجاسة التي لا يعفى عنها في الجسم والثياب ومكان الصلاة وما يحمله كورقة نجسة في جيبه مثلا

3. உடல், உடை, தொழும் இடம் மேலும் அவர் வைத்துக்கொண்டிருக்கும் பொருட்கள் ஆகியன மன்னிக்கப்படாத நஜீஸை விட்டும் சுத்தமாக இருத்தல் வேண்டும். அவர் உதாரணமாக அவருடைய சட்டைப்பையில் மன்னிக்கப்படாத நஜீஸ்பட்ட ஒரு கடதாசித்தாள் இருப்பதைப் போல. ( தொழுகை செல்லு படியாகாது )

4. وستر العورة أي أن يستر الذكر مابين السرة والركبة وأن تستر المرأة الحرة جميع جسمها ما عدا الوجه والكفين

4. அவ்றத்தை மறைத்தல் வேண்டும் : அதாவது ஒரு ஆண் அவனுடைய முழங்காலுக்கும் தொப்புளுக்கும் இடைப்பட்ட பகுதியை மறைத்திருக்க வேண்டும். ஒரு சுதந்திரமான பெண் அவளுடைய முகம் இரு மணிக்கட்டுகள் தவிர்ந்த முழு உடலையும் மறைத்திருக்க வேண்டும்.

5. واستقبال القبلة : أي أن يتوجه نحو الكعبة المشرفة التي في مكة المكرمة في القيام والجلوس وبمعظم بدنه في الركوع والسجود

5. கிப்லாவை முன்னோக்குதல் வேண்டும் : அதாவது நிற்பதிலேயும் அமர்வதிலேயும் மேலும் ருகூவிலும் சுஜூதிலும் உடலின் பெரும்பான்மையான பகுதிகளைக் கொண்டு மக்காவிலே உள்ள சங்கையான கிப்லாவை முன்னோக்குதல்.

6. ودخول وقت الصلاة : فلا تصح مثلا أن يؤدي صلاة الظهر قبل الزوال ولا المغرب قبل غروب الشمس

6. தொழுகையுடைய நேரம் நுழைந்திருத்தல் வேண்டும் : உதாரணமாக சூரியன் நடு உச்சியில் இருந்து சாய்வதற்கு முன்னால் ழுஹ்ரையோ அல்லது சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னால் ம.்.ரிபையோ தொழுவது செல்லுபடியாகாது.

7. والتمييز وهوو أن يكون الولد بلغ من العمر إلى حيث يفهم الخطاب ويرد الجواب

7. பகுத்தறிவு கொண்டவனாக இருத்தல் வேண்டும் : அதாவது ஒரு பிள்ளை ஒரு கேள்வியை விளங்கி அதற்குப் பதில் அளிக்கக்கூடிய பருவத்தை அடைந்திருத்தலாகும்.

أسئلة

1- عدد شروط صحة الصلاة
2- مامعنى من شروط الصلاة الإسلام
3- مامعنى الطهارة عن النجاسة التي لا يعفى عنها
4- ماهي عورة الرجل ؟ وماهي عورة المرأة الحرة ؟
5- ماهي القبلة ؟ وبم يستقبلها المصلي
6- ماهو التمييز

பாடம் : 7 الدرس – 7

## أركان الصلاة

## தொழுகையுடைய ருகுன்கள்

الصلاة لها أركان وسنن فاالأركان التي تكون من الصلاة ولا تصح الصلاة بدونها وأما السنن فتصح الصلاة بدنها ولكن من تركها فاته ثوابها

தொழுகைக்கு ருகுன்கள் ஸுன்னத்கள் என்றும் இருக்கின்றன.

ருகுன்கள் என்பது : தொழுகைக்கு உட்பட்ட ஒரு விடயமாகும், அவைகள் இன்றி தொழுகை செல்லுபடியாகாது, ஸுன்னத் என்பது அவைகள் இன்றியும் தொழுகை செல்லுபடியாகும். என்றாலும் அதை விட்டவருக்கு அதன் நன்மை தப்பிப் போய்விடும்.

وأركان الصلاة سبعة عشر ركنا وهي :

தொழுகையின் ருகுன்கள் 17 ஆகும்.
அவையாவன :

1. النية وهي قصد فعل الصلاة بالقلب

1. நிய்யத் வைத்தல் : அதாவது தொழுவதை உள்ளத்தால் நாடுவதாகும்.

2. وتكبيرة الإحرام وهي قول الله أكبر أول الصلاة

2. இஹ்ராமுடைய தக்பீர் : அதாவது தொழுகையின் ஆரம்பத்தில் ‘‘அல்லாஹு அக்பர்’’ என்று கூறுவதாகும்.

3. والقيام في الفرض للقادر

3. நிற்க சக்தியுடையவர் பர்ளு தொழுகையில் நின்று தொழுதல்.

4. وقرءاة الفاتحة بالبسملة والتشديدات ويجب إخراج الحروف من مخارجها كالصاد والسين والدال والضاد

4. பிஸ்மில்லாஹ் கூறி சத்துகளைப் கவனித்து பாத்திஹாவை ஓதுதல். ஸாத், ஸீன், தால், லாத் போன்ற சொற்களை அவை வெளியாகும் இடங்களிலிருந்து வெளியாக்குவது அவசியமாகும்.

5. والركوع

5. ருகூஉ செய்தல்.

6. والطمأنينة فيه وهي سكون الأعضاء كلها دفعة واحدة بقدر سبحان الله

ருகூஉவில் தாமதித்தல் அதாவது உடல் உறுப்புகளனைத்தும் “ ஸுப்ஹானல்லாஹ்” என்று சொல்லுமளவு நேரத்திற்கு அமைதி பெற்றித்தல்.

7. والاعتدال

6. நிலைக்கு வருதல்.

8. والطمأنينة فيه

7. அதிலே தாமதித்தல் அதாவது ஸுப்ஹானல்லாஹ் என்ற அளவு
முழு உடம்பையும் அமைதிப்படுத்துவதாகும்.

9. والسجود مرتين

9. இரு விடுத்தம் ஸுஜூத் செய்தல்.

10. والطمأنينة فيهما

10. அவ்விரண்டு ஸுஜூதிலும் தாமதித்தல்.

11. والجلوس بين السجدتين

11. இரண்டு ஸுஜூதுக்கு மத்தியில் உட்காருதல்.

12. والطمأنينة فيه

12. அதிலே தாமதித்தல்.

13. والجلوس للتشهد الأخيروما بعده

13. கடைசி த‘ஹ்ஹுதுக்காகவும் அதற்குப் பின்னால் ஓதக்கூடியவைகளுக்காகவும் அமருதல்.

14. والتشهد الأخير

14. கடைசி த‘ஹ்ஹுதை ஓதுதல்.

15. والصلاة على النبي ﷺ

15. நபி முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்லுதல்.

16. والسلام أو التسليمة الأولى

16. முதலாவது ஸலாம் கூறுதல்.

17. والترتيب فلو سجد قبل الركوع عمدا بطلت صلاته

17. மேற்கூறப்பட்டவைகளை ஒழுங்கு முறைப்படி செய்தல். ருகூஉக்கு முன்னால் வேண்டுமென்று ஸுஜூத் செய்தால் அவருடைய தொழுகை முறிந்து விடும்.

أسئلة

1- ماهي تعريف أركان الصلاة ؟
2- عدد أركان الصلاة
3- مامعنى تكبيرة الإحرام
4- ماهي الطمأنينة فيه ؟

பாடம் : 8 الدرس -8

## مبطلات الصلاة

## தொழுகையை முறிக்கும் விடயங்கள்

تبطل صلاة المسلم بأحد الأمور التالية :

பின்வரக்கூடிவைகளில் ஒன்றை ஒரு முஸ்லிம் செய்வதன் மூலம் அவருடைய தொழுகை முறிந்து விடும்.

1. إذ تكلم عمدا بكلام الناس وكان ذاكرا أنه في الصلاة أما إذا تكلم ناسيا بكلام قليل فلاتبطل صلاته

1. தொழுகையிலே இருப்பதை அறிந்தவனாக ( அல் குர்ஆன், திக்ர் அல்லாத ) மனிதன் பேசும் பேச்சுகளை மனமுரண்டாக ஒருவர் பேசினால் அவருடைய தொழுகை முறிந்து விடும். என்றாலும் தொழுவதை மறந்து குறைவாகப் பேசினால் அவருடைய தொழுகை முறிந்து விடாது.

2. إذا أكل أو شرب ذاكرا أنه في الصلاة ولو كان أكله أوشربه قليلا

2. தொழுகையில் இருப்பதை நினைவில்வைத்துக் கொண்டு சாப்பிட்டால் அல்லது பருகினால் அது குறைவாக இருந்தாலும் அவனுடைய தொழுகை முறிந்து விடும்.

3. أن يفعل أفعالا كثيرة تسع قدر ركعةمن الزمن

3. ஒரு ரக்அத் தொழும் காலத்தை எடுத்துக் கொள்ளுமளவு அதிகமாக செயல்களைச் செய்தல்.

4. إذا عمل حركة فاحشة كأن قفز قفزة فاحشة في الصلاة أو حرك يده أو عينه مثلا بقصد اللعب

4. தொழுகையிலே பாரிய அசைவாக கருதப்படும் கடும் பாய்ச்சல் போன்ற ஒரு செயலைச் செய்தால் அல்லது விளையாட்டு நோக்கத்திற்காகக் தன் கண்ணை அல்லது கையை அசைத்தால் தொழுகை முறிந்து விடும்.

5. إذا زاد ركنا فعليا عمدا كأن سجد ثلاث مرات في ركعة واحدة

6. ஒரு ரக்அத்திலே 3 விடுத்தம் ஸுஜூத் செய்வதைப் போல மனமுரண்டாக செயல் ரீதியான ஒரு ருகுனை அதிகரித்தால் தொழுகை முறிந்து விடும்.

7. إذا أحدث في صلاته كأن خرج منه ريح فعلى المصلي أن يحزر من الوقوع في مثل هذه الأمور كي لا تبطل صلاته

6. தொழும் போது தொடக்கு ஏற்பட்டால் தொழுகை முறிந்து விடும்.
உதாரணமாக தொழுது கொண்டிருக்கையில் காற்று வெளியாவதைப் போல. எனவே தொழக்கூடியவர் அவருடைய தொழுகை முறிந்து விடாமல் இருப்பதற்காக இது போன்ற விடயங்களில் இருந்து மாட்டிக் கொள்ளாதிருக்க எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

أسئلة

1- ماحكم الصلاة إذا تكلم فيها عمدا بكلام الناس ذاكرا أنه في الصلاة
2- وما الحكم إذا كان ناسيا ؟
3- ماالحكم إذا فعل في صلاته أفعالا كثيرة ؟
4- مامعنى إذا زاد ركنا فعليا ؟
5- مامعنى إذا أحدث في صلاته ؟

பாடம் : 9

الدرس : 9

## صلاة الجماعة

## ஜமாஅத் தொழுகை

قال رسول الله ﷺ

صلاة الجماعة أفضل من صلاة الفذ بسبع وعشرين درجة

رواه مسلم

**அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**“ஜமாஅத்தாக தொழுவது தனித்து தொழுபவதை விட 27 மடங்குகள் மிகச் சிறந்ததாகும்.”**

**( அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் )**

وصلاة الجماعة فرض على الكفاية أي لا يجب على كل مسلم أن يصلي جماعة

ولكن يجب أن يقوم بها بعض المسلمين

فمن أراد أن يصلي جماعة فليراع أمور منها :

ஜமாஅத்தாக தொழுவது பர்ளு கிபாயாவாகும். அதாவது ஜமாஅத்தாக தொழுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகமாட்டாது. ஆனால் சில முஸ்லிம்கள் அதனை மேற் கொள்வது கடமையாகும். யார் ஜமாஅத் ஆக தொழ நாடுகிறாரோ அவர் சில விடயங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவையாவன :

أن يقف متأخرا عن الإمام ولا يكبر إلا بعد أن يكبر الإمام

இமாமை விட்டும் ம:ஃமூம் பின்னால் நிற்றல். இமாம் தக்பீர் கூறியதன் பின்புதான் தக்பீர் ம:ஃமூம் கூறுவார்.

وأن ينوي الصلاة جماعة فيقول بقلبه مثلا أصلي فرض الظهر جماعة

தொழுகையை ஜமாஅத் ஆக தொழுவதாக நிய்யத் வைத்தல் ( பர்ளான ளுஹ்ர் தொழுகையை ஜமாஅத்தாக தொழுகின்றேன். என்று நிய்யத் வைப்பது போல )

وأن يتبع الإمام فلا يسبقه بالأركان الفعلية كالركوع والسجود وغيرهما

இமாமை பின்துயருதல். ருகூஉ, ஸுஜூத் இன்னும் அது அல்லாத ருகுன்களைப் போன்ற செயல் ரீதியான ருகுன்களில் இமாமை முந்தாமல் இருத்தல்.

وأن يؤمن أي يقول ءامين مع إمام الجماعة

ஜமாஅத் நடத்தக்கூடிய இமாமுடன் சேர்ந்து “ ஆமீன்” கூறுதல்.

وأن لا يسلم قبل الإمام عمدا لأنه إن فعل ذلك بطلت صلاته

இமாம் ஸலாம் கொடுக்க முன்னால் ஸலாம் கொடுக்காமல் இருத்தல் ஏனெனில் அதனை செய்தால் அவருடைய தொழுகை முறிந்துவிடும்.

تنبيه

لا يصح اقتداء الرجل بالمرأة ويصح اقتداء الرجل والمرأة بالرجل وبالصبي الذكر المميز

**விழிப்பூட்டல்**

பெண்ணை பின்பற்றி ஆண் தொழமுடியாது. மேலும் ஒரு ஆணையோ அல்லது பகுத்தறிவு உள்ள ஒரு சிறுவனையோ ஆணோ, பெண்ணோ தொழ முடியும்.

أسئلة

1- اذكر حديثا عن رسول الله في فضل صلاة الجماعة
2- ماحكم صلاة الجماعة ؟
3- متى يكبر المأموم ؟
4- ماذا ينوي من أراد أن يصلي خلف إمام ؟
5- ماالحكم إذا سلم من صلاته قبل الإمام عمدا ؟

பாடம் :10 الدرس – 10

## صلاة الجمعة

## ஜும்ஆத் தொழுகை

صلاة الجمعة فرضها الله على كل مسلم ذكر حر بالغ عاقل مقيم غير معذور أما المرأة والصبي والمجنون والمسافر والمعذور بعزر شرعي فلاتجب عليهم صلاة الجمعة والعذرالشرعي كأن كان مريضا بشق عليه الذهاب إلى الجمعة مع المرض مشقة شديدة

அல்லாஹு தஆலா சுதந்திரமான, பருவமடைந்த, பகுத்தறிவுள்ள, ஊர்வாசியான, மார்க்க அனுமதி வழங்கப்படாத ஒவ்வொரு முஸ்லிமான ஆண்கள் மீதும் ஜும்ஆத் தொழுகையைக் கடமையாக்கியுள்ளான்.
பெண், அடிமை, சிறுபிள்ளை, பைத்தியம் ஏற்பட்டவர், பிரயாணி, அனுமதி வழங்கப்பட்டவர் போன்றோருக்கு ஜும்ஆத் தொழுகை கடமையாகமாட்டாது.
மார்க்க ரீதியான அனுமதி வழங்கப்பட்டவர் என்பது ஜும்ஆஹ் நடைபெறும் இடத்திற்கு செல்ல முடியாத அளவு கடுமையாக நோய்வாய்ப்பட்டிருப்பதை போலவாகும்.

وصلاة الجمعة ركعتان بدل صلاة الظهر التي هي أربع ركعات ويشترط فيها :

நான்கு ரக்அத்களைக் கொண்ட ழுஹ்ர் தொழுகைக்குப் பகரமாக ஜும்ஆத் தொழுகையானது இரண்டு ரக்அத்களைக் கொண்டதாகும்.

ஜும்ஆத் தொழுகையில் பின்வருவனவற்றை நிபந்தனையிடப்படுகிறது.

أن تصلى بعد دخول وقت الظهر

ழுஹ்ருடைய நேரம் நுழைந்ததன் பின்னால் ஜும்ஆத் தொழுகை தொழுப்படுதல்.

أن يسبقها خطبتان

ஜும்ஆத் தொழுகையை இரண்டு குத்பாக்கள் முந்தியிருத்தல்.

أن تصلى جماعة بأربعين

நாற்பது ஆண்களைக் கொண்ட ஜமாஅத்தாகத் தொழுதல்.

تنبيه

விழிப்பூட்டல்

من فاتته صلاة الجمعة صلى الظهر لأن الجمعة لا تصلى قضاء ركعتين

யாருக்கு ஜும்ஆத் தொழுகை தப்பிப் போய் விடுகிறதோ அவர் ளுஹ்ர் தொழுகையை தொழுது கொள்ள வேண்டும். ஏனெனில் ஜும்ஆத் தொழுகையை இரண்டு ரக்அத்களாக கழாச் செய்யப்படமாட்டாது.

فائدة

பிரயோஜனம் தரும் விடயமொன்று

يسن الإكثار من الصلاة على النبي يوم الجمعة قال رسول الله ﷺ

إن من أفضل أيامكم يوم الجمعة فأكثروا علي من الصلاة فيه فإن صلاتكم معروضة علي

رواه أبو داؤد

ஜும்ஆ நாளிலே முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலவாத் கூறுவதை அதிகப்படுத்துவது ஸுன்னத் ஆகும்.

**முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :**

**“உங்களுடைய நாட்களிலே மிகவும் சிறந்தது ஜும்ஆவுடைய நாளாகும். அந்நாளிலே என் மீது ஸலவாத் கூறுவதை அதிகப்படுத்துங்கள். நிச்சயமாக உங்களுடைய ஸலவாத்துகள் எனக்கு எடுத்துக்காட்டப்படுகின்றன.”**

**( அறிவித்தவர் : இமாம் அபூ தாவூத் )**

أسئلة

1- على من تجب صلاة الجمعة ؟
2- على من لا تجب صلاة الجمعة ؟
3- اذكر عذرا شرعيا لترك الجمعة
4- كم عدد ركعات صلاة الجمعة ؟
5- ماذا يشترط لصلاة الجمعة ؟
6- من فتته صلاة الجمعة ماذا يصلي ؟
7- اذكر حديثا عن رسول الله يبين فضل يوم الجمعة

பாடம் : 11 الدرس – 11

## صوم رمضا ن

## ரமழான் மாத நோன்பு

قال الله تعالى

يأيها الذين ءامنوا كتب عليكم الصيام كما كتب على الذين من قبلكم لعلكم تتقون

سورة البقرة : ءاية 183

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை எடுத்து நடப்பதற்காகவும், ஹறாம்களை தவிர்ந்து நடப்பதற்காகவுமே முன்பிருந்தோர் மீது நோன்பு விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது."**

**(அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் :183 )**

والصيام هو الامتناع عن الأكل والشرب وسائر المفطرات من طلوع الفجر إلى غروب الشمس مع النية المبيتة والأكمل أن يقول بقلبه : نويت صوم غدا عن أداء فرض رمضان هذه السنة إيمانا واحتسابا لله تعالى

நோன்பு என்பது இரவில் வைக்கப்பட்ட நிய்யத்துடன் பஜ்ர் உதயமானதிலிருந்து சூரியன் மறையும் வரை உண்ணுதல், பருகுதல் இன்னும் நோன்பை முறிக்கக் கூடிய எனைய விடயங்களை விட்டும் தவிர்ந்திருப்பதாகும்.
பரிபூரணமான நிய்யத்தாகிறது :-
இந்த வருடத்தின் ரமழான் மாதத்தின் பர்ழான நோன்பை ஈமானுடனும் அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தவனாகவும் அதாவாக நாளை பிடிக்க நிய்யத் வைத்து விட்டேன் என்று கூறுவதாகும்.

من مفسدات الصيام

நோன்பை முறித்துவிடும் சில விடயங்கள் :

1. الأكل والشرب عمدا ولو قليلا أما من أكل أو شرب ناسيا فلا يفطر ولو كان كثيرا

1. குறைவாக இருந்தாலும் உண்ணுதல், பருகுதல் அது குறைவாக இருந்தாலும் பரவாயில்லை யாரேனும் ஒருவர் மறதியாக உண்டால் அல்லது பருகினால் அது அதிகமாக இருந்தாலும் அவருடைய நோன்பை முறித்து விடாது.

2. وإخراج القئ عمدا كأن يدخل الصائم إصبعه في فمه فيخرج القئ عمدا وإن يبلع شيئا أما إذا غلبه القئ ولم يبلع شيئا عمدا فلا يفطر

2. வேண்டுமென்று வாந்தியெடுத்தல். உதாரணமாக ஒரு நோன்பாளி அவருடைய வாயிலே விரலை விட்டு வாந்தி எடுப்பதைப் போல ஒருவர் வேண்டுமென்று வாந்தியெடுத்து அதிலே கொஞ்சமேனும் விழுங்கவில்லை என்றாலும் இவருடைய நோன்பு முறிந்து விடும்.
என்றாலும் தானாக வாந்தி வந்து அதில் எதையும் விழுங்க வில்லை என்றால் அவரின் நோன்பு முறிந்து விடாது.

3. والقطرة في الأذن لا تفطر وفي الأنف تفطر إذا وصل الماء إلى الخيشوم وهو منتهى الأنف أما في العين فلا تفطر

ويجوز للمريض الذي يخاف على نفسه الضرر من الصيام أن يفطر

3. காதினுள்ளோ சிறு நீர் துளி செல்வது நோன்பை முறிக்காது எனினும் மூக்கினுள் சென்று மூக்கின் முடிவிடத்தை அடைந்தால் நோன்பை முறித்து விடும்.

கண்ணுக்குள்ளோ நீர் துளி செல்வது நோன்பை முறிக்காது.

நோன்பு நோற்பதின் மூலம் தனக்கு தீங்கு ஏற்படும் எனப் பயந்த ஒரு நோயாளி நோன்பை விட முடியும்.

اسئلة

1- اذكر ءاية من القرءان في وجوب صوم رمضان
2- ماهو الصيام
3- من أراد الصيام ماذا ينوي بقلبه ليلا
4- عدد بعض مفسدات الصيام
5- متى يجوز للمريض أن يفطر؟

பாடம் : 12 الدرس - 12

**الزكاة**

**ஸகாத்**

قال الله تعالى

وأقيموا الصلاة وءاتوا الزكوة

سورة البقرة : ءاية 43

**அல்லாஹ் கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ தொழுகையை நிறைவேற்றுங்கள். ஸகாத்தை நிறைவு செய்யுங்கள்.”**

**( அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் : 43 )**

الزكاة من أعظم أمور الإسلام وقد فرض الله تعالى الزكاة وتكون بأن يدفع المزكي شيئا معلوما من ماله لأناس حددهم الشرع منهم الفقراء والمساكين

ஸகாத் என்பது இஸ்லாத்தின் மிக முக்கியமான விடயங்களில் ஒன்றாகும்.
ஸகாத் கொடுப்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்.
ஸகாத் கொடுப்பதென்பது ஸகாத் கொடுப்பவர் மார்க்கம் வரையறுத்த குறிப்பிட்ட சிலருக்கு அவருடைய பொருட்களிலிருந்து குறிப்பிட்ட ஒன்றை கொடுப்பதன் மூலம் நிறைவேறி விடும்.

பகீர்களும், மிஸ்கீன்களும் ஸகாத் பெறக்கூடியவர்களில் உள்ளவர்களாவர்.

والفقراء هم الذين لا يجدون نصف كفايتهم الضرورية

பகீர்கள் எனப்படுபவர்கள் ஒரு நாளின் அத்தியாவசியத் தேவையின் அரைவாசியைக் கூட பெற்றுக் கொள்ளாதவர்கள்.

والمساكين هم الذين لا يجدون كل كفايتهم الضرورية ولكن يجدون نصفها

மிஸ்கீன்கள் எனப் படுபவர்கள் ஒரு நாளின் அத்தியாவசியத் தேவையை முழுமையாக பெற்றுக் கொள்ள மாட்டார்கள் எனினும் அதில் அரைவாசியைப் பெறுவார்கள்.

وتجب الزكاة في أشياء منها

ஸகாத் பின்வரும் சில பொருட்களில் கடமையாகும்.

الإبل والبقر والغنم

ஆடு, மாடு, ஒட்டகம்

والذهب والفضة

தங்கம், வெள்ளி

والزورع المقتاتة حالة الاحتيار كالقمح والأرز

அன்றாட வாழ்க்கையில் பிரதானமான உணவாக எடுத்துக் கொள்ளக் கூடிய தானியங்கள் கோதுமை, அரிசியைப் போல.

وأموال التجارة

வியாபாரப் பொருட்கள்

وتحب الزكاة الفطر وهي التي تدفع إذا دخل شهر رمضان وقبل غروب شمس يوم العيد ولها شروط

ஸகாதுல் பித்ர் கொடுப்பதும் கடமையாகும். அது ரமழான் மாதம் நுழைவதில் இருந்து பெருநாளினுடைய சூரியன் மறைவதற்கு முன்னால் கொடுக்கப்படல் வேண்டும். அதற்கென சில நிபந்தனைகளும் உள்ளன.

أسئلة

1- اذكر ءاية من القرءان عن الزكاة
2- على من تجب الزكاة ؟
3- لمن تعطى الزكاة ؟
4- من هم الفقراء ؟
5- من هم المساكين
6- عدد بعض الأموال التي تجب فيها الزكاة

பாடம் : 13 الدرس –13

# الحج

# ஹஜ்

قال الله تعالى

ولله على الناس حج البيت من استطاع إليه سبيلا

سورة آل عمران ءاية 97

**அல்லாஹ் கூறியுள்ளான் :**

விளக்கம் :

**“ இஸ்லாம் கட்டளையிட்டதுக்கமைய க.ஃ.பா அமைந்துல்ல நகராகிய மக்கா நகர் சென்றுவர ஆற்றளையுடையவர்கள் ஹஜ் செய்வதை கடமையாக்கியுள்ளான்.”**

( அத்தியாயம் : ஆல இம்ரான் வசனம் : 97 )

الحج من إغظم أمور الإسلام ويجب على المستطيع في العمر مرة واحدة

ஹஜ் என்பது இஸ்லாத்தின் மிக வலுப்பமான விடயங்களில் ஒன்றாகும்.
அதனை நிறைவேற்ற சக்தி உடையவர் வாழ்வில் ஒரு முறையாவது ஹஜ் செய்வது கடமையாகும்.

وللحج ستة أركان ستة لا تصح بدونها وهي

ஹஜ்ஜுக்கு ஆறு ருகுன்கள் உள்ளன,
அவைகள் இன்றி ஹஜ் நிறைவேற மாட்டாது.
அவையாவன :

1- الإحرام أي النية

1. இஹ்ராமுடைய நிய்யத் வைத்தல்.

-2 والوقوف بعرفة

2. அறபாவில் தரிபடுதல்.

-3 وطواف الإفاضة أي أن يدور حول الكعبة سبع مرات في وقته وبشروط

3. தவாபுல் இபாழஹ் : அதாவது க.ஃ.பாவைச் சுற்றி தவாபுடைய நேரத்திலே நிபந்தனைகளுடன் ஏழுமுறை வலம் வருவதாகும்.

-4 والسعي بين الصفا والمروة سبع مرا ت

4. ஸபா மர்வாவுக்கு மத்தியில் ஏழு முறை தொங்கோட்டம் ஓடுதல்.

-5 والحلق أو التقصير أي أن يحلق شعره كله أو يقص بعض شعره ولو ثلاث مرات والمرأة تقصر ولا تحلق

முடியைச் சிரைத்தல் அல்லது கத்தரித்தல். அதாவது முடி முழுவதையும் சிரைத்தல் அல்லது முடியின் சிலதை கத்தரித்தல் மூன்று முடியாயினும் பரவாயில்லை.
ஒரு பெண் முடியைக் கத்தரிப்பாள், சிரைக்க மாட்டாள்.

-6 والترتيب في معظم الأركان

6. அனைத்து ருகுன்களையும் ஒழுங்கு முறைப்படி செய்தல்.

أسئلة

-1 اذكر ءاية من القرءان عن الحج
-2 على من يجب الحج ؟ وكم مرة في العمر ؟
-3 ماهي أركان الحج ؟ عددها
-4 مامعنى الإحرام ؟
-5 مامعنى طواف الإفاضة ؟
-6 مامعنى الحلق أو التقصير؟

# فصل

# الأخلاق الإسلاميـة

# இஸ்லாம் கூறும் நற்குணங்கள் பற்றிய விபரம்

الدرس :1

பாடம் : 1

## من أخلاق النبي ﷺ

## நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்குணங்களில் சில

قال الله تعالى في وصف نبيه ﷺ

وإنك لعلى خلق عظيم

(سورة القلم | ءاية 4)

**அல்லாஹ் தஆலா நபி ﷺ அவர்களின் குணத்தை பற்றி பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ நிச்சயமாக ( நபியே ) நீங்கள் மகத்தான குணமுடையவராக இருக்கின்றீர்கள்.”**

**( அத்தியாயம் : அல்-கலம் வசனம் : 4 )**

وعندما سئلت عائشة رضي الله عنها عن خلقه قالت كان خلقه القرءان

رواه البخاري

ஆயிʿா அன்னையிடம் பெருமானாரின் நற்குணத்தைப் பற்றிக் கேட்கப்பட்ட போது “ அல்லாஹ்வின் தூதருடைய குணமனைத்தும் குர்ஆன் கூறக்கூடிய நற்பண்புகளாக இருந்தன” என பதிலளித்தார்கள்.

( அறிவித்தவர் : இமாம் அல்- புஹாரீ )

أعطى الله تعالى نبينا محمدا ﷺ الخلق الحسن حتى إنه كان مشهورا بين قومه بالصادق الأمين

وكان موصوفا بالحلم والصبر والشجاعة فقد قال ابن عمر رضي الله عنهما مارأيت أشجع ولا أجود ولا أرضى من رسول الله ﷺ

رواه البيهقي

நபியவர்கள் தன் சமூகத்தாருக்கு மத்தியில் உண்மையாளர் என்றும் நம்பிக்கையாளர் என்றும் பிரசித்தி பெற்றிருக்குமளவுக்கு அல்லாஹ் அவர்களுக்கு நற்குணங்களை வழங்கியிருந்தான். மேலும் சகிப்புத் தன்மை, வீரம் போன்ற பண்புகளைக் கொண்டவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். நபி ﷺ அவர்களை விட மிகப் பெரும் வீரரையோ, கொடை வள்ளலையோ, திருப்தி கொள்பவரையோ நான் கண்டதே இல்லை என இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.

( அறிவித்தவர் : இமாம் அல்-பைஹகீ )

وكان ﷺ يزور المريض ويجيب دعوة من دعاه إن كان غنيا أو فقيرا وكان يأمر بالمعروف بالرفق وينهي عن المنكر

ويدعو إلى الصفح والعفو ومكارم الأخلاق

மேலும், நபி ﷺ அவர்கள் நோயாளியைச் சந்திப்பவராகவும், அழைப்பவர் ஏழையாக இருப்பினும், செல்வந்தனாக இருப்பினும் அழைப்பை ஏற்று பதிலளிப்பவராகவும் இருந்தார்கள். மேலும் மென்மையாக நன்மையைக் ஏவக் கூடியவராகவும், தீயதைத் தடுக்கக் கூடியவராகவும் இருந்ததோடு விட்டுக்கொடுத்தல், மன்னித்தல் போன்ற நற்குணங்களின் பால் அழைக்க கூடியவராக இருந்தார்கள்.

أسئلة

1. اذكر ءاية من القرءان في وصف خلق النبي
2. ماذا قالت عائشة رضي الله عنها لما سئلت عن خلق النبي ؟
3. بم اشتهر النبي بين قومه ؟
4. ماذا قال ابن عمر رضي الله عنهما عن رسول الله ﷺ ؟
5. اذكر بعض الخصال الحسنة التي كان عليها رسول الله ﷺ

பாடம் : 2 الدرس -2

## حفظ اللسان

## நாவைப் பேணல்

خاطب أحد الصحابة لسانه فقال يالسان قل خيرا تغنم واسكت عن شر تسلم من قبل أن تندم

ஸஹாபாக்களில் ஒருவர் தனது நாவை நோக்கி நாவே! நல்லதைக் கூறு பயனடைவாய். தீயதை பேசாது மௌனமாக இரு. நீ கவலைப் பட முன்னதாக ஈடேற்றம் அடைவாய்.

إني سمعت رسول الله ﷺ يقول

أكثر خطايا ابن ءادم من لسانه

رواه الطبراني

நிச்சயமாக நான் நபி ﷺ அவர்கள் கூறக் கேட்டேன். “ மனிதன் செய்யும் அதிக பாவங்கள் அவனது நாவினாலேயே இடம்பெறுகின்றன.

( அறிவித்தவர் : இமாம் அத்-தபறானீ )

فاللسان من النعم التي أنعم الله بها على عباده وهو مع صغرحجمه قد يكون سببا لدخول صاحبه إلى النار

நாவு என்பது அல்லாஹ் அடியார்களுக்கு வழங்கிய அருட்களில் ஒன்றாகும். அது சிறியதாக இருப்பினும் சில வேளைகளில் நாவுக்குரியவர் நரகில் நுழைவதற்கு அது காரணியாக ஆகிவிடுகிறது.

فينبغي أن نستعمله في سبل الخيركذكر الله تعالى وتلاوة القرءان الكريم وفي قول الصدق والأمر بالمعروف والنهي عن المنكر وفي كل ما يعود على الناس بالنفع والخير

எனவே அதனை அல்லாஹ்வை திக்ர் செய்தல், சங்கையான அல் குர்ஆனை ஓதுதல் போன்ற நல்ல விடயங்களுக்குகாகவும், உண்மை பேசுதல், நல்லதை ஏவித் தீயதைத் தடுத்தல் போன்ற விடயங்களுக்காகவும் இன்னும் மனிதர்களுக்குப் பயனையும் நன்மையும் ஏற்படுத்தக் கூடிய விடயங்களுக்காகவும் பயன்படுத்தல் வேண்டும்.

كما ينبغي أن تحفظ ألسنتنا عن الكفر الذي هو أخطر الذنوب عند الله تعالى وكذالك نحفظه عن الكذب والشتم وعن الغيبة والنميمة وقول الحرام والكلام القبيح وما فيه إيذاء للمسلم

அல்லாஹ்விடத்தில் பாவங்களிலேயே மிகக் கெட்ட பாவமான குப்ரை விட்டும் நாம் எம் நாவுகளை பாதுகாத்துக் கொள்வது அவசியமாக இருப்பது போல பொய் பேசுதல், ஏசுதல், புறம்பேசுதல், கோல் சொல்லுதல், ஹறாமைப் பேசுதல், அசிங்கமான பேச்சுக்களைப் பேசுதல், முஸ்லிம்களுக்கு நோவினையளிக்கும் பேச்சுக்களை பேசுதல் போன்ற வற்றிலிருந்தும் நம் நாவுகளை பாதுகாக்க வேண்டும்.

أسئلة

1- ماذا قال بعض الصحابة مخاطبا لسانه ؟ ومن رواه ؟
2- فيما ينبغي أن نستعمل اللسان ؟
3- عم ينبغي حفظ ألسنتنا

பாடம் : 3 الدرس 3

الكذب

قال رسول الله ﷺ

إياك والكذب فإن الكذب يهدي إلى الفجور وإن الفجور بهدي إلى النار

رواه ابن ماجه

**நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**"பொய் சொல்வதை விட்டும் உம்மை எச்சரிக்கின்றேன். ஏனெனில் பொய் என்பது பாவத்தின் பால் இட்டுச் செல்லும். இன்னும் பாவமென்பது நரகின் பாலும் இட்டுச் செல்லும்."**

**( அறிவித்தவர் : இமாம் இப்னு மாஜஹ் )**

الكذب هو الإخبار بالشئ على خلاف الواقع عمدا وهو حرام سواء كان على وجه الجد أم على وجه المزاح

பொய் என்பது : நடந்ததற்கு மாற்றமாக ஒரு விடயத்தை வேண்டுமென அறிவித்தல். அது நகைச்சுவை செய்யும் நோக்கில் இருப்பினும் சரி தெண்டித்து சொல்லும் நோக்கில் இருப்பினும் சரி அது ஹறாமாகும்.

قال رسول الله ﷺ

لا يصلح الكذب في جد ولا هزل

رواه البيهقي

**அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**"நகைச்சுவை செய்யும் நோக்கிலும், தெண்டித்து சொல்லும் நோக்கிலும் ( ஸீரியஸாக ) பொய் பேசுவது ஆகுமாகமாட்டாது"**

**( அறிவித்தவர் : இமாம் அல்-பைஹகீ )**

فيجب على المسلم أن يتجنب هذه المعصية حتى لا يقع في المهالك فإذا حدث أحدا يتكلم بصدق لأن الصدق من صفات الصالحين

அழிவுகளில் சிக்காமல் இருப்பதற்கு இப்பாவ செயலை தவிர்ந்து கொள்வது ஒரு முஸ்லிம் மீது கட்டாய கடமையாகும். எனவே அவர் பேசும் போது உண்மையே பேசுவார். ஏனெனில் உண்மை பேசுவது நல்லடியார்களின் பண்பொன்றாகும்.

والكذب الذي فيه إلحاق الضرر بالمسلمين معصيته من الكبائر

وما يسميه بعض الناس كذبا أبيض أو كذب نيسان وهو حرام في شرع الله تعالى

முஸ்லிம்களுக்கு தீங்கை ஏற்படுத்தும் பொய்யானது பெரும் பாவத்தைச் சேரும். சில மனிதர்கள் வெள்ளைப் பொய், ஏப்ரல் பூல் எனக் கூறப்படும் பொய்களெல்லாம் அல்லாஹ் அருளிய இஸ்லாமிய மார்க்கத்தில் ஹறாமானவையாகும்.

أسئلة

1- اذكر حديثا عن رسول الله في النهي عن الكذب
2- ماهو الكذب
3- اذكر حديثا عن رسول الله في النهي عن الكذب في حال الجد والمزاح
4- ما حكم الكذب الذي فيه إلحاق الضرر بالمسلمين ؟
5- ماحكم ما يسمى كذبة أول نيسان ؟

பாடம் : 4 الدرس – 4

## الإخلاص والرياء

## உளத்தூய்மையும், முகஸ்துதியும்

قال الله تعالى

فمن كان يرجوا لقاء ربه فليعمل عملا صالحا ولا يشرك بعبادة ربه أحدا
سورة الكهف | ءاية 110

**அல்லாஹ் தஆலா பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**" யார் மறுமை நாளில் நல்ல நிலையில் இருக்கு விரும்புவாரோ அவர் நல்லமற்கள் செய்யும் போது மனிதர்களின் புகழ்ச்சியை நாடாமல் அமல் செய்து கொள்ளட்டும்."**

**( அத்தியாயம் : அல்-கஹ்ப் வசனம் : 110 )**

وقال النبي ﷺ

إنما الأعمال بالنيات

(رواه البخاري ومسلم )

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**" அடியான் வைக்கும் நிய்யத்தின் பிரகாரமே அவன் மேற்கொள்ளும் வணக்கங்களுக்கு கூலி வழங்கப்படும்.**

**( அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ, முஸ்லிம் )**

أي أن العمل الصالح لا بد فيه من نية صحيحة خالصة لوجه الله تعالى لكي يكون مقبولا عند الله تعالى

அதாவது, நிச்சயமாக நல்லமல்கள் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கும், அவனது திருப்பொருத்தைப் பெறுவதற்கும் அமல்கள் செய்யும் போது பரிசுத்தமான நிய்யத் அவசியமாகும்.

والرياء حرام وهو العمل بالطاعة طلبا لمحمدة الناس فالمسلم إذا صلى ليقول عنه الناس فلان مصلي فإنه يكون مرائيا في صلاته

முகஸ்துதி ஹறாமாகும். முகஸ்துதி என்பது அது மனிதர்களின் புகழைத் தேடும் நோக்கில் ஒரு வணக்கத்தைச் செய்வதாகும்.

ஓரு முஸ்லிம் தன்னைப் பார்த்து " இன்னார் தொழுகையாளி" என மக்கள் கூற வேண்டும் என்ற எண்ணத்தில் தொழுதால் அவர் தன் தொழுகையை முகஸ்துதிக்காக தொழுத குற்றவாளியாகிவிடுவார்.

ومن وقع في الرياء فقد وقع في ذنب كبير ولا ثواب في عمله فعند القيام بعمل الطاعة ليكن قصدك مرضاة الله تعالى وحده وهو مايسمى الإخلاص في العبادة

யார் முகஸ்துதி எனும் பாவத்தில் சிக்கிவிடுவாரோ நிச்சயமாக அவர் பெரும் பாவத்திலே சிக்கியவராகவே கணிக்கப்படுவார். அவர் முகஸ்துதியுடன் செய்த எந்தவொரு அமலுக்கும் எந்தக் கூலியும் வழங்கப்படமாட்டாது. வணக்க வழிபாடுகள் செய்யும் போது அல்லாஹ்வின் பொருத்தத்தை மாத்திரம் நாடியே செய்யப்படுதல் வேண்டும். இவ்வாறு செய்வதைத்தான் "வணக்கத்தில் தூய எண்ணம் கொள்ளல்" அதாவது இஹ்லாஸ் என சொல்லப்படும்.

أسئلة

1- اذكر ءاية من القرءان في الحث على الإخلاص
2- اذكر حديثا عن رسول الله في الحث على الإخلاص ومن رواه ؟
3- وما معنى هذا الحديث ؟
4- ماحكم الرياء ؟ وما هو الرياء ؟
5- ماحكم من صلى ليقول عنه الناس فلان من المصلين ؟
6- ماهو الإخلاص في العبادة ؟

பாடம் : 5 الدرس – 5

## الإحسان إلى الوالدين

## ஒரு முஸ்லிமான ஒரு பிள்ளை தன் பெற்றொருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகள்

قال الله تعالى

وقضى ربك أن لا تعبدوا إلا إياه وبالوالدين إحسانا إما يبلغن عندك الكبرأحدهما

أوكلا هما فلا تقل لهما أف ولا تنهرهما وقل لهما قولا كريما

سورة الإسراء : ءاية 23- 24

**அல்லாஹ் தஆலா கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ உமது இரட்சகன் தன்னையன்றி ( வேறு எவரையும் ) நீங்கள் வணங்கக் கூடாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளான். அவ்விருவரில் ஒருவரோ, அல்லது அவ்விருவருமோ உம்மிடம் முதுமையை அடைந்து விட்டால் அவர்களை நோக்கி ‘உ.ஃ.ப்’ ( சீ ) எனக் கூறவோ, அவ்விருவரையும் விரட்டவோ வேண்டாம். அவ்விருவருக்கும் மென்மையான வார்த்தையையே கூறுவீராக!”**

**( அத்தியாயம் : அல்- இஸ்ராஉ வசனம் : 23-24 )**

من حق الوالدين المسلمين على ولدهما المسلم أن يبرهما ويحسن إليهما ولا يكون غليظا في معاملتها ويتكلم معهما بالكلام اللين اللطيف

ஒரு முஸ்லிமான பிள்ளை தன்னுடைய பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகளில் மிகப் பிரதானமானவை அவ்விருவரையும் கவனித்தலும், அவ்விருவருக்கும் உபகாரம் செய்தலும், அவர்களுடன் நடந்து கொள்ளும் போது கடுமையாக நடக்காமல் இருத்தலும், மென்மையாக பேசுதலுமாகும்.

فالله سبحانه تعالى نهى عن أن يقال لهما أف وأمر بحفض الجناح لهما أي أن يكلمهما الابن بأدب واحترام ويتواضع معهما

படைப்புகளின் தன்மைகளை விட்டும் பரிசுத்தமான அல்லாஹ் அவ்விருவருக்கும் ( **உ.்.ப்** ) **"சீ"** என்று கூறுவதையும் தடுத்துள்ளான். அவ்விருவர் முன்னும் இறக்கைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் கூறியுள்ளான். அதாவது அவ்விருவருடனும் ஒழுக்கத்துடனும் கண்ணியத்துடனும் பேசுமாறும், மேலும் பணிவாக நடந்து கொள்ளுமாறும் கட்டளையிட்டுள்ளான்.

جاء رجل إلى رسول الله ﷺ فقال يارسول الله من أحق الناس بحسن صحابتي ؟ قال أمك قال ثم من ؟ قال أمك قال ثم من ؟ قال أمك قال ثم من ؟ قال أبوك

( رواه البخاري )

" நான் மிகச் சிறந்த முறையில் நடந்து கொள்ள தகுதியான மனிதர் யார் ? என ஒரு தடவை நபிகளாரிடம் வந்து ஒருவர் கேட்ட போது, " உங்களுடைய தாய்" எனப் பதிலளித்தார்கள். மீண்டும் அதையே கேற்க அதற்கும் "உங்களுடைய தாய்" எனப் பதலளித்தார்கள். மறுபடியும் யார்? என கேற்க அதற்கும் "உங்களுடைய தாய்" என்றே கூறினார்கள். ( நான்காவது தடவையாகவும் ) அதே வினாவைக் கேட்ட போது. "உங்களுடைய தந்தை" என பதிலளித்தார்கள்.

( அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ )

أسئلة

1- اذكر ءاية من القرءان في الحث على بر الوالدين
2- ماهو حق الوالدين المسلمين على ولدهما ؟
3- مامعنى حفض الجناح لهما ؟
4- اذكر حديثا عن رسول الله يبين حق الوالدين

பாடம் : 6 الدرس : 6

## صلة الأرحام

## உறவினர்களுடன் சேர்ந்து நடத்தல்

حث الإسلام على زيارة الأقارب أن كانوا أقارب من جهة الأب أو أقارب من جهة الأم وهؤلاء يسمون أرحاما وتسمى زيارتهم ومساعدتهم والإحسان إليهم صلة الأرحام ومن قطع هذه الصلة بلا عزر استحق عذاب الله تعالى فقد قال النبي ﷺ لا يدخل الجنة قاطع رواه البخاري

தந்தை வழி உறவினராக இருப்பினும், தாய் வழி உறவினராக இருப்பினும் அவர்களைச் சந்திக்கும் படியே இஸ்லாம் ஆர்வமூட்டியுள்ளது. இவர்களை ''குடல் வாய் ஜனங்கள்'' என கூறுவதுமுண்டு. இவர்களைச் சந்தித்தல், இவர்களுக்கு உதவி செய்தல், உபகாரம் செய்தல் போன்றவற்றுக்கு ''குடல் வாய் ஜனங்களை சேர்ந்து நடத்தல்'' என சொல்லப்படும். இவ்வுறவுகளை எக்காரணமுமின்றி எவர் துண்டித்து நடப்பாரோ அவர் அல்லாஹ்வின் தண்டனைக்கு தன்னை ஆளாக்கிக் கொள்கிறார்.

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**''எவரொருவர் உறவுகளைத் துண்டித்து நடப்பாரோ அவர் முதலில் சுவனம் செல்பவர்களுடன் சேர்ந்து சுவனம் நுழையமாட்டார்.''**

**( அறிவித்தவர் : இமாம் புஹாரீ )**

والمعنى أن قاطع الرحم لا يدخل الجنة مع الأولين إنما يدخلها بعد أن يأخذ نصيبه من العذاب في الآخرة إن مات على الإسلام ولم يعف الله عنه

இதன் கருத்தாவது நிச்சயமாக உறவுகளைத் துண்டித்து நடப்பவன் முதலில் சுவனம் நுழையக் கூடியவர்களுடன் சுவனம் நுழையமாட்டான் என்பதாகும். அதாவது ''அவன் மு.ஃ.மினாக மரணித்து ( குடல்வாய் ஜனங்களை துண்டித்து நடந்த பாவத்தை ) அல்லாஹ் மன்னிக்காவிட்டால் மறுமையில் அவன் நரகில்

வேதனைகளையும், தண்டனைகளையும் அனுபவித்த பின்னராகவே சுவனம் நுழைவான்'' என்பதாகும்.

فتجب زيارة الأرحام على من استطاع ومن كان مسافرا منهم ولم يستطع زيارته فتحصل صلة الرحم بالمراسلة أو إرسال السلام

குடல்வாய் உறவுகளை சந்திப்பது சக்தியுள்ளோர் மீது கடமையாகும். அவர்களில் யார் பிரயாணியாக இருந்து அவரை சந்திக்க முடியவில்லையோ அவர்களுக்கு கடிதம் அனுப்புவதன் மூலம், அல்லது ஸலாம் சொல்லி அனுப்புவதன் மூலம் உறவுகளை சேர்ந்து நடப்பது உண்டாகும்.

وتكون الزيارة لهم بحيث لا تنقضي مدة يشعر فيها الأقارب بالجفاء مثلا يزورهم في رمضان وفي العيدين وعند المصائب وفي الأفراح

மேலும், எவ்வளவு காலம் அவர்களைச் சந்திக்காமல் இருப்பின் அவர்கள் வெறுப்பை உணர்வார்களோ அக்கால அளவை அடைவதற்கு முன் அவர்களைச் சந்திக்க வேண்டும்.

உதாரணமாக

அவர்களை ரமழானில், இரு பெருநாட்களில் மற்றும் இன்ப துன்பங்களில் போது சந்தித்தல்.

أسئلة

1- من هم الأرحام الذين حث الإسلام على زيارتهم ؟
2- ماذا تسمى زيارتهم والإحسان إليهم ؟
3- من قطع صلة الرحم ماذا يستحق ؟
4- اذكر حديث عن رسول الله في النهي عن قطع الأرحام ؟ ومن رواه ؟
5- مامعنى هذا الحديث
6- متى يزور الشحص أقاربه ؟

பாடம் : 7 الدرس : 7

## التواضع للمسلمين

## முஸ்லிம்களுடன் பணிவாக நடந்து கொள்ளல்

قال رسول الله ﷺ

لا يدخل الجنة من كان في قلبه مثقال ذرة من كبر

رواه أحمد

أي لا يدخلها مع الأولين إن كان مسلما

**அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**“ எந்த முஸ்லிமின் உள்ளத்தில் கடுகளவேனும் பெருமையுள்ளதோ அவர் முதலாவதாக சுவனம் நுழைபவர்களுடன் சேர்ந்து சுவனம் நுழையமாட்டார்.”**

**( அறிவித்தவர் : இமாம் அஹ்மத் )**

ذم الإسلام التكبر والمتكبرين والمتكبر هو الذي يحتقر الآخرين ويتعالى عليهم أو يتكبر عن قبول الحق من شحص ءاخر مع علمه أنه يقول الحق إما لكونه صغيرا أو فقيرا أو ضعيفا أو غيرذلك

فيتكبر عليه ولا يتواضع يقبل هذا الحق

பெருமையையும், பெருமைக்காரர்களையும் இஸ்லாம் இகழ்ந்துள்ளது. எவனொருவன் பிறரை இழிவாகக் கருதி பிறரைப் பார்க்கிலும் தன்னை உயர்வாக கருதிகிறானோ அவனே பெருமைக்காரனாவான். ஒருவர் சத்தியத்தை கூறும் போது அவர் சிறியவராக இருப்பதனாலோ அல்லது ஏழையாக இருப்பதனாலோ அல்லது பலவீனமானவராக இருப்பதனாலோ அவர் பேசுவது உண்மை என்று தெரிந்தும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பவறும் பெருமையடிப்பவராகும்.

قال النبي ﷺ :

الكبر بطر الحق وغمط الناس

رواه مسلم

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

“பெருமை என்பது உண்மையை ஏற்காதிருப்பதும், பிறரை விட தன்னை உயர்த்திப் பார்பதுமாகும்.”

( அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் )

ومعنى بطر الحق : دفعه ورده على قائله أي لايقبل هذا الحق

பதருல் ஹக் என்பதன் கருத்து : உண்மையாளரின் உண்மையை ஏற்க மறுப்பதாகும்.

ومعنى غمط الناس : احتقارهم

கம்துன்னாஸ் என்பதன் கருத்து :- பிற மனிதர்களை இழிவாக கருதுவதாகும்.

فالتكبر صفة ذميمة ويدل على أخلاق غير حميدة

فينبغي للمسلم أن يتواضع للمسلمين يعاملهم بلين ولطف ويقابلهم بوجه طلق

பெருமை ஒரு இழிவான பண்பாகும். அது இகழப்பட்ட ஒரு குணமாகும். எனவே ஒரு முஸ்லிம் பிற முஸ்லிம்களுடன் மென்மையாகவும் தாழ்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். மேலும், மலர்ந்த முகத்துடன் சந்திக்க வேண்டும்.

أسئلة

1- اذكر حديثا عن رسول الله في ذكر الذم التكبر
2- من رواه ؟ وما معناه ؟
3- من هو التكبر ؟
4- اذكرحديثا عن رسول الله في معنى التكبر ومن رواه ؟
5- مامعنى بطر الحق ؟
6- مامعنى غمط الناس ؟